Registered as a news paper.

பக்கங்கள்: பதினாறு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இன்று மாலை ஆரம்பமாகின்றது

திருமறைக் கலா மன்றம்

தயாரித்து வழங்கும்

காவிய நாயகன்

(திருப்பாடுகளின் காட்சி)

மார்ச் 30,31, ஏப்ரல் 1,3,4, - 2004

(செவ்வாய், புதன், வியாழன், சனி, ஞாயிறு)

மன்ற அரங்கில் - மாலை 7.00 மணிக்கு

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம் (சி-2335) - திருமறைக் கலா மன்றம்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 பங்குனி 17 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஸபர் 08 (30.03.2004) செவ்வாய்க்கிழமை இதழ்:181

## இலங்கை வரலாற்றில் முதன்முறையாக

# அரச ஊடகங்களை பொறுப்பேற்றார் தேர்தல் ஆணையாளர் திசநாயக்க!

(கொழும்பு)

**அரசாங்க ஊடகங்களான ரூபவாஹினி கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டத்தாபனம் ஆகியவற்றை, தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தனது பொறுப்பில் எடுத்துள்ளார்.**

**இந்த இரண்டு அரச ஊடகங்களும் ஒரு கட்சி சார்ந்த வகையில் நடந்து கொண்டதனாலேயே- தேர்தல் ஆணையாளர் இந்த முடிவை எடுத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.**

இந்த இரு ஊடகங்களையும் தனது பொறுப்பில் எடுத்த தேர்தல் ஆணையாளர், அவையிரண்டுக்கும் பணிப்பாளராக டபிள்யு. டி.எல். பெரேரா என்பவரை நியமித்துள்ளதாக - தேர்தல் ஆணையாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

இவரது இந்தப் பதவிக்காலம் ஏப்ரல் 2 ஆம் திகதி வரை இருக்குமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை அரசியலமைப்பின் விதிகளின் படி தனக்கு உரியதான அதிகாரங்களைக் கொண்டு இந்த நியமனத்தை வழங்கியுள்ளதாக தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வரலாற்றிலேயே தேர்தல் ஆணையாளர் ஒருவர் அரச ஊடகங்களைத் தனது பொறுப்பில் எடுத்து, அவற்றுக்கு பணிப்பாளர் ஒருவரை நியமித்தது இதுதான் முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

அரச ஊடகங்கள் என்பது ஒரு கட்சிக்காகப் பாரபட்சமாக நடக்காமல், பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ள வேண்டும். அத்துடன் - தனியார் ஊடகங்களுக்கும் இது பொருந்தும். அவையும் பொறுப்புணர்வுடன் நடக்க வேண்டுமென அரச ஊடகங்களின் புதிய பணிப்பாளர் பெரேரா தெரிவித்தார்.

## விடுதலைப் புலி போராளிகள் மட்டக்களப்பில் ஊடுருவலாம்

### கருணாவின் செயலாளர் கூறுகிறார்

(மட்டக்களப்பு)

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணாவிற்கெதிராக மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளதாக, அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்றும், நேற்றுமுன்தினமும் இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. இதில் மட்டக்களப்பு மக்கள் எதுவித உதவியையும் கருணா குழுவிற்குச் செய்யக்கூடாதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் "பிரபாகரனே தமிழர் தலைவர், துரோகியென இணங்காணப்பட்ட புளொட் மோகனுடனா கருணா கதைக்கிறாய்?, பிரதேசவாதம் பேசும் கருணாவே மட்டக்களப்பை விட்டு உடனே வெளியேறு, போன்ற வாசகங்களும் இடம்பெற்றுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெருமளவு விடுதலைப் புலிகள் இந்த துண்டுப் பிரசுரங்களைக் கொண்டு திரிந்ததாக பொலிஸார் மற்றும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை- வன்னியிலிருந்து வந்த பெருமளவான விடுதலைப் புலிகளின் போராளிகள் மட்டக்களப்பு (16 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் முக்கிய மாநாடு!

(கொழும்பு)

கிழக்கு கடற்பரப்பில் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்துவது தொடர்பாக திருகோணமலை கடற்படைத்தளத்தில் உயர் மட்ட மாநாடு ஒன்று இடம்பெற்றிருக்கிறது.

மட்டக்களப்பில் கருணாவுக்கு எதிரான நடவடிக்கைகளுக்குப் புலிகள் தயார் படுத்தல்களை மேற்கொண்டுவருவதாகவும் கடற்புலிகளின் நடமாட்டம் வெருகல் ஆறுப் பகுதியில் அதிகரித்திருப்பதாகவும் கடற்படை வட்டாரங்களை மேற்கோள்காட்டும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இதையடுத்தே- இந்த உயர்மட்ட மாநாடு இடம்பெற்றிருக்கிறது. திருகோணமலைக் கடற்படைத்தளத்தில் இந்த நீண்ட ஆலோசனைக்கூட்டம் இடம்பெற்றது.

கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் தயாசந்தகிரி, (16 ஆம் பக்கம் பார்க்க)

## தவறி வீழ்ந்து குடும்பஸ்தர் மரணம்!

(யாழ்ப்பாணம்)

மண் ஏற்றி வந்த உழவு இயந்திரத்தில் இருந்து வீழ்ந்து குடும்பஸ்தர் ஒருவர் அரியாலையில் மரணமானார்.

இந்தச் சம்பவத்தில் தம்பையா (வயது 54) என்பவரே மரணமடைந்தார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, கைதடி நாவற்குழி என்ற முகவரியைச் சேர்ந்த மேற்படி நபர் நேற்றுக்காலை மண் ஏற்றிவந்த உழவு இயந்திரத்தில் இருந்து கீழே வீழ்ந்து மரணமடைந்தார்.

இவரது சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த விபத்துத் தொடர்பாக யாழ் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## விடுதலைப் புலிகளின் அரசியற் பலத்தை தேர்தல் மூலம் வெளிப்படுத்த வேண்டும்!

### யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி

(யாழ்ப்பாணம்)

மிகவும் உயர்வாக இருக்கும் விடுதலைப் புலிகளின் இராணுவபலத்துடன் அரசியல் ரீதியான பலத்தை மேலும் வலுவூட்டுவதாகவே இந்தத் தேர்தல் அமைந்திருக்கின்றது என, விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்தார்.

அரசியற்துறை யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது-

தமிழீழ விடுதலைப் புலிகள் தனியொரு குழுவாகப் போராடவில்லை. இது ஒரு மக்கள் இயக்கம் என்பதை (16 ஆம் பக்கம் பார்க்க)

## பிரசாரத்திற்குச் சென்ற ஈ.பி.டி.பியினர் பொதுமக்களால் நேற்று விரட்டியடிப்பு!

(தென்மராட்சி)

இராணுவ, பொலிஸ் பாதுகாப்புடன்- மிருசுவில் வடக்குப் பகுதிக்குத் தேர்தல் பிரசாரத்துக்காகச் சென்ற ஈ.பி.டி.பியினரை, அப்பகுதி மக்கள் கற்களை வீசித் துடித்தியடித்த சம்பவம் நேற்று நண்பகல் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

இராணுவ, பொலிஸ் பாதுகாப்புக்களுடன் ஈ.பி.டி.பியினர் ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட வாகனங்களில் நேற்று நண்பகல் 12 மணியளவில் மிருசுவில்- படித்த மகளிர் குடியேற்றப் பகுதிக்குச் சென்றனர்.

இதையடுத்து, (16 ஆம் பக்கம் பார்க்க)

### தபால் மூலம் வாக்களிக்க

## தமக்கு உரிமை மறுக்கப்பட்டதாக பொலிஸ் சார்ஜண்ட் முறைப்பாடு!

(யாழ்ப்பாணம்)

நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு தமக்கு உரிமை மறுக்கப்பட்டதாகத் தெரிவித்து, பொலிஸ் சார்ஜண்ட் ஒருவர், மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறையிட்டுள்ளார்.

மானிப்பாய் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த, சி.எம்.டபிள்யு. சேமசிங்க என்பவரே தமக்கு வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டமை குறித்து விசாரணை நடத்துமாறு கோரியுள்ளார்.

இவர் தனது முறைப்பாட்டில், நாடாளுமன்றத் தேர்தலில், (16 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. அரசஅதிபர் மீதான தாக்குதலுக்கு புலிகள் கண்டனம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் மோனகுருசாமி மீது மேற்கொள்ளப்பட்ட கொடூரமான தாக்குதலை, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வன்மையாகக் கண்டிப்பதாக விடுதலைப் புலிகளின் தலைமையகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியத்திற்கு எதிரானவர்களால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது தாக்குதல் சம்பவம் இதுவாகும். இத்தாக்குதல் சம்பவங்கள் அப்பிரதேச மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட சதி நடவடிக்கையாகும். இத்தேர்தலின் ஊடாக தமிழ் மக்கள் தேசிய உணர்வை (16 ஆம் பக்கம் பார்க்க)

## மோ. சைக்கிள்கள் மோதியதில் இளைஞன் மரணம்!

(யாழ்ப்பாணம்)

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் எதிரெதிரே மோதிய விபத்துச் சம்பவத்தில் ஒருவர் மரணமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று காலை 11.30 மணியளவில் நல்லூர் பிரதேச செயலகத்திற்கு அண்மையில் இடம்பெற்றது. சுழிபுரத்தைச் சேர்ந்த பரமேஸ்வரன் (வயது 23) என்பவரே மரணமானவராவார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்றுக்காலை 11.30 மணியளவில் எதிரெதிரே அதிக வேகத்துடன் வந்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதிக் கொண்டன. இந்தச் சம்பவத்தில் ஒருவர் மரணமடைந்தார். மரணமடைந்தவரின் சடலம் வைத்திய பரிசோதனைகளின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (தீ)



## பாராளுமன்றத் தேர்தல் - 02.04.2004
## 24.03.2004, 25.03.2004 ஆம் திகதிகளில் அஞ்சல் மூலம் வாக்குச் சீட்டு அடையாளமிட முடியாத அஞ்சல் வாக்காளர்கள்

02.04.2004 ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் அஞ்சல் வாக்காளர்களாக அனுமதிக்கப்பட்டு, இதுவரை வாக்களிக்க முடியாதுள்ள அஞ்சல் வாக்காளர்கள் அனைவரும் தங்களுடைய அஞ்சல் வாக்குச்சீட்டுக்களை ஏப்ரல் 2 ஆம் திகதிவரை அடையாளமிட முடியுமென சகல அத்தாட்சிப் படுத்தும் அலுவலர்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அடையாளமிடப்பட்ட வாக்குச்சீட்டுக்கள் அடங்கிய உறைகள் உரிய தெரிவித்தாட்சி அலுவலர்களிடம் தபாலில் சென்றடையும் கால இடைவெளியை கருத்திற்கொண்டு விரைவாக சகல அஞ்சல் வாக்காளர்களையும் வாக்குச்சீட்டுக்களை அடையாளமிட வலியுறுத்துமாறு சகல அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களையும் கேட்டுக்கொள்கிறேன். அதுபோல் இதுவரை வாக்களிக்கமுடியாது போன அஞ்சல் வாக்காளர்களும் தங்களது அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களிடம் சென்று வாக்குச் சீட்டுக்களை அடையாளமிடுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அஞ்சல் வாக்குச்சீட்டுக்கள் அடங்கிய உறைகள் இடப்படும் வாக்குப் பெட்டி 02.04.2004 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு பொயிடப்படுமாதலால் சகல தபால் வாக்குச்சீட்டுக்களும் அத்தினத்தின் உரிய நேரத்திற்கு முன்னர் வாக்குப் பெட்டியில் இடுவதற்கு தெிவித்தாட்சி அலுவலரிடம் கிடைப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளும்படி சகலரினதும் அவதானத்தைக் கோருகின்றேன்.

தேர்தற் செயலகம்,
சரணமாவத்தை,
இராஜகிரிய,
27.03.2004.

தயானந்த திசாநயக்க,
தேர்தல் ஆணையாளர்,

(சி-2362)

### வல்லிபுர ஆழ்வார் இராம நவமி உற்சவம்

(வடமராட்சி)

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் வருடாந்த இராம நவமி உற்சவம் இன்று காலை 8 மணிக்கு அபிஷேக ஆராதனையுடன் ஆரம்பமாகி தொடர்ந்து விசேட பூசைகள் இடம்பெறவுள்ளன.

இதனைத் தொடர்ந்து சமய சொற்பொழிவுகள், விசேட கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.(17)

### விசர்நாய் தடுப்பு மருந்து ஏற்றல்

வளர்ப்பு நாய்களுக்கான விசர் நாய் தடுப்பு மருந்து, இன்றுகாலை புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலா மன்றத்தில் வைத்து ஏற்றப்படவுள்ளன.

இதேவேளை எதிர்வரும் 5 ஆம் திகதி மந்திகையிலுள்ள கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் வைத்து ஏற்றப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### தூண்டி சஞ்சிகை அறிமுகவிழா

தூண்டி சஞ்சிகை அறிமுக நிகழ்வு இன்று மாலை 3 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக பொருளியற் துறை மண்டபத்தில் கு.லக்ஸ்மணன் தலைமையில் இடம்பெறும்.

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வீடியோ கமரா விற்பனைக்கு உண்டு. சிறிய புதிய டிஜிட்டல் வீடியோ கமரா விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:- மு.ஸ்ரீசந்திரா, ஊரிக்காடு, வல்வெட்டித்துறை. (சி-2365)

**ராஜா** யாழ்ப்பாணம்.

வசீகரன், பூஜா நடித்த



கண்களால் கைது செய்

காட்சி நேரம்:- 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

(சி-2263)

**புதிய பிரிவு**

A/l 2005

(கலை, வர்த்தகப் பிரிவு)
ஏப்பிரல் 04
ஞாயிறு காலை 9 மணி

DMI
யாழ். நகர்

(சி-2366)

**நிறைஞ்சனைஸ்** சங்கானை

அர்ஜுன், குஷ்பு நடித்த

சேவகன்

காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு : இரவு 8.45 (பு.நே)

THE ITTALION JOB

(சி-2262)

## கண்ணீர்க் காணிக்கைகள்



28.03.2004 அன்று அகால மரணமடைந்த J/79 சிறாம்பியடி கிராமசேவகர் சொ.பாலச்சந்திரன் அவர்களின் மரணச்செய்திகேட்டு அதிர்ச்சி அடைந்தோம். அன்னாரின இழப்பால் துயர் உற்று இருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

J/79 கிராமசேவகர் பிரிவு
வாழ் மக்கள்.

(694)

## கொள்கைக்கான தேர்தல் 2004

எமது தலைமை தமிழீழ விடுதலைப் புலிகள் : எமது இலட்சியம் தமிழீழத் தாயகம்.

தமிழ் மக்களின் எதிர்காலத்தில்
பெரும் மாற்றத்தை ஏற்படுத்தப் போகும்
ஒரு நிகழ்ச்சி.

பொங்கு தமிழின் ஒரு ஏற்பாட்டாளர்.
சமாதானப் பேச்சுவார்த்தையில்
பெண்கள் விவகார உபகுழுவின் ஒரு பிரதிநிதி
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்
ஒரேயொரு பெண் வேட்பாளராக வருகிறார்.

தாய் நிலத்துக்கும் விடுதலை
தமிழ்ப் பெண்களுக்கும் விடுதலை



நேற்றுவரை மின்னாது முழங்காது
தேசத்தின் விடுதலைக்கு வலுச்சேர்த்தவர்,
பத்மினி சிதம்பரநாதன்

X 7

பெண்கள்
பண்பாட்டு மையம்

## தமிழ் இனத்தின் அரசியல் பலத்தினை நிர்ணயிக்கின்ற தேர்தல் - 2004

இளைய தலைவன், சலுகைகளுக்கு விலை போகாதவன், தமிழீழ விடுதலைப் போருக்கு பலம் சேர்க்கும் உன்னத இலட்சியவாதி

**செல்வராஜா கஜேந்திரன்** (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ் மாவட்ட வேட்பாளர்)

X 10

ஈஸ்வரி மரக்காலை,
பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி.

(693)



செல்வராஜா கஜேந்திரன்
(முன்னாள் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர், முன்னாள் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர்)

"தேசியப் பற்றுக்கொண்ட இளம் மாணவத் தலைவனாய் பொங்கி எழுந்து போராடிய கஜேந்திரனுக்கே உங்கள் வாக்கு"

X 10

உண்மைக்கும் நேர்மைக்கும்
லட்சியத்துக்கும் வாக்களித்து தமிழின
விடுதலைக்குப் பலம் சேர்ப்பவன்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
முகிழ்நிலை ஆசிரியர்கள்.

(690)

# வட - கிழக்கில் சுதந்திர வாக்களிப்பு; கண்காணிப்பாளர்கள் கூடிய அக்கறை!

## ஜோன் குஷ்னகன் தெரிவிப்பு

(திருகோணமலை)

வடக்கு - கிழக்கில் மக்கள் சுதந்திரமாக வாக்களிப்பதற்கு அரசாங்கம் மேற்கொள்ளுகின்ற நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கவனித்து வருவதாக ஐரோப்பிய யூனியனின் பிரதான தேர்தல் அவதானிப்பாளர் ஜோன் குஷ்னகன் தெரிவித்தார்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் திருமலை மாவட்ட வேட்பாளர் இரா. சம்பந்தன் - குஷ்னகனைச் சந்தித்துப் பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

இடையூறுகள், தடங்கல்கள் இன்றி வடக்கு - கிழக்கு மக்கள் வாக்களிப்பதற்கு போதுமான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளனவா என்பது தொடர்பாக நாம் தற்போது பரிசீலித்து வருகின்றோம். இலங்கையில் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல் ஒன்று நடைபெற வேண்டும் என்பதையே ஐரோப்பிய யூனியன் எதிர்பார்க்கிறது. வடக்கு-கிழக்கு மாகாண நிலைமை குறித்து நாம் கூடுதலான கவனம் செலுத்துகின்றோம்.

சம்மந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு ஐரோப்பிய யூனியன் பிரதி நிதிகள் பேசிவருகின்றனர் என குஷ்னகன் மேலும் தெரிவித்தார்.

# பொதுத்தேர்தல் கடமைகளில் பொலிஸாருடன் படையினரும்!

## இராணுவத்தளபதி உத்தரவு

(கொழும்பு)

நாடாளுமன்றத் தேர்தல் கடமைகளில் பொலிஸாருக்கு உதவி தேவைப்படின், அவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு இராணுவத்தினருக்கு இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் லயன்ல் பலகல்ல உத்தரவு பிறப்பித்துள்ளார்.

தேர்தல் பாதுகாப்பு கடமை தொடர்பாக இராணுவ மற்றும் பொலிஸ் தரப்புக்களுக்கு இடையில் நடைபெற்ற பேச்சுக்களையடுத்தே இராணுவத் தளபதி இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

அதேவேளை மட்டக்களப்பிலும் கொழும்பிலும் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களை அடுத்து கிழக்கிலும் தலைநகரிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு,

படையினர் உஷார்நிலை யில் வைக்கப்பட்டிருப்பதாக இரா ணுவப் பேச்சாளர் கேணல் சுமேத பெரேரா தெரிவித்தார்.

# ஹக்கீமை ஏற்றிச்சென்ற ஹெலி கிளம்பிச்செல்ல மறுப்பு!

முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் பயணம்செய்த உலங்கு வானூர்தி 10 அடிக்கு மேல் உயரப்பறக்க மறுத்ததால், அவரது பயணம் தடைப்பட்டது.

நேற்றுமுன்தினம் மாலை 4 மணிக்கு ஓட்டமாவடியில் நடைபெற்ற முன்னாள் பிரதி அமைச்சர் முகைதீன் அப்துல்காதரின் மரணச் சடங்கில் கலந்துகொள்வதற்காக கல்முனையிலிருந்து உலங்கு வானூர்தியில் செல்வதற்கு ரவூப் ஹக்கீம் தயாரானார்.

ஆனால், அவர் செல்லவிருந்த உலங்கு வானூர்தியால் பத்து அடி உயரத்திற்கு மேல் பறக்கமுடியவில்லை. இதனையடுத்து அதில் பயணம்செய்யவிருந்த சில ஆதரவாளர்கள் இறக்கப்பட்டு பயணத்தைத் தொடர முயற்சிக்கப்பட்டது. ஆனாலும், அந்த முயற்சி பலனளிக்கமுடியாத நிலையில் உலங்கு வானூர்தியில் பயணம் செய்வதை நிறுத்திய அமைச்சர் ஹக்கீம், தனது சொந்த வாகனத்தில் பயணத்தைத் தொடர்ந்தார்.

விமானத்தில் பயணம் செய்வதற்கு ஏற்பட்ட தடங்கல் தமக்குச் சநதேகத்தை ஏற்படுத்துவதாக முஸலிம் காங்கிரஸின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (01)

# உத்தியோகபூர்வ முடிவுகளையே ஊடகங்கள் வெளியிடவேண்டும்

## தேர்தல் ஆணையாளர் உத்தரவு

(கொழும்பு)

தேர்தல் ஆணையாளரின் உத்தியோகபூர்வ அனுமதியின்றி, தேர்தல் முடிவுகளை வெளியிடும் ஊடகங்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப் படும் என்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க எச்சரித்துள்ளார்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி வாக்குகள் எண்ணப்பட்டு, மாவட்ட அடிப்படையிலான தேர்தல் முடிவுகளை வெளியிடுவதற்கு தேர்தல் திணைக்களம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

ராஜகிரியவில் உள்ள தேர்தல் திணைக்களத்தில், போராசிரியர் வீ.கே.சமரநாயக்க தலைமையிலான 30 பேர் கொண்ட குழு விசேட கணினி நிலையம் ஒன்றினூடாக நாடு முழுவதும் தேர்தல் முடிவுகளை வெளியிடும்

தேர்தல் முடிவுகள் ரூபவாஹினி மூலமும், இன்ரநெற் மூலமும் உடனுக்குடன் வெளியிடப்படும். தேர்தல் முடிவுகளை வெளியிடும் நடவடிக்கைகளை கொழும்பு பல்கலைக் கழக தொழில்நுட்பப்பிரிவு - தேர்தல் தினத்திலிருந்து மாவட்டமட்ட முடிவுகள் வெளியிடப்படும்வரை தொடர்ச்சியாக பணிகளை மேற்கொள்ளும்.

## சண்டே லீடர் அச்சகத்தை

# சோதனையிட முடியாமல் திரும்பிச்சென்ற பொலிஸார்

(கொழும்பு)

'சண்டே லீடர்' பத்திரிகையை வெளியிடும் அச்சகத்தைச் சோதனையிட பொலிஸார் சென்றபோதும்- அதற்கான நீதிமன்ற அனுமதியைப் பெறாததால் நிர்வாகத்தால் திருப்பி அனுப்பப்பட்டனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

சண்டே லீடர் பத்திரிகையை அச்சிடும் அச்சகத்தைச் சோதனையிடுவதற்குப் பொலிஸ் குழுவொன்று நேற்றுமுன்தினம் சென்றது.

ஆனால், இந்தப் பொலிஸ் குழுவிடம் பத்திரிகை அச்சிடும் அச்சகத்தைச் சோதனையிடுவதற்கான நீதிமன்ற உத்தரவு இருக்கவில்லை. நீதிமன்ற அனுமதியின்றி அச்சகத்தைச் சோதனையிடுவதற்கு அனுமதிக்கமுடியாதென அச்சக நிர்வாகி பொலிஸாருக்குத் தெரிவித்தார்.

இதனையடுத்து பொலிஸ் குழு சோதனை நடத்தாமல் திரும்பியது.

# சுதந்திர முன்னணி வேட்பாளரின் ஆயுதபாணி ஆதரவாளர் கைது

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மாத்தளை மாவட்ட வேட்பாளர் ஜானகபண்டார தென்னக்கோனின் ஆதரவாளர்களான மூன்று ஆயுதபாணி சந்தேகநபர்கள் - தம்புள்ள பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இது தொடர்பாக தம்புள்ள பொலிஸ் நிலையத்தின் தலைமை அதிகாரி கருத்துத் தெரிவிக்கையில் -

இந்த சந்தேகநபர்கள் மூவரும் ஆயுதங்கள் வைத்திருப்பதாகத் தாம் நம்புவதாகத் தெரிவித்தார். அத்துடன், இவர்களைக் கைதுசெய்யும் போது கற்களால் நிரப்பிய இரும்புக் குண்டுகள், வாள், கத்தி, பல சைக்கிள் செயின்கள் மற்றும் போலியான பொலிஸாரின் அடையாள அட்டைகளையும் வைத்திருந்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில் ஒருவர் ஜானகபண்டாரவின் 75 பொக்கற் கலண்டர்களையும் வைத்திருந்தார். அத்துடன் இந்த மூன்று சந்தேகநபர்களில் ஒருவர் றிசேவ் பொலிஸ் பிரிவின் சப் இன்ஸ்பெக்டராகவும் உள்ளார்.

இவர் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஏதோ ஒரு சம்பவத்தால் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.



தம்பலகாமத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவாக அந்தப் பகுதி மக்கள் நடத்திய ஊர்வலத்தையும், கரும்புலி சுபாவின் உருவப் படத்திற்கு இரா. சம்பந்தன் மாலை அணிவிப்பதையும் படங்களில் காணலாம்.

## வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த

# 28 ஆயிரம் வாக்காளர்கள் வாக்களிக்க விண்ணப்பம்

## தேர்தல் ஆணையாளர் தகவல்

(கொழும்பு)

வட - கிழக்கு மாகாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து வெளி மாவட்டங்களில் வசித்துவரும் 28 ஆயிரத்து 311 வாக்காளர்கள் எதிர்வரும் பொதுத்தேர்தலில் வாக்களிக்க விண்ணப்பித்துள்ளதாகத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த மக்களில் வாக்களிப்பதற்கு விண்ணப்பித்தவர்களில்- வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த 23 ஆயிரத்து 03 வாக்காளர்களும், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 5067 வாக்காளர்களும், திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த 241 பேரும் அடங்குகின்றனர்.

இடம்பெயர்ந்த வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு ஏதுவாக அவர்கள் வசிக்கும் இடங்களுக்கு அண்மையாகவே வாக்களிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதைவிட விசேட ஏற்பாட்டைப் பயன்படுத்த விரும்பும் இடம்பெயர்ந்த வாக்காளர்களிடம் இதற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளன.

இதன் காரணமாக விசேட ஏற்பாடாக இடம்பெயர்ந்த வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு ஏதுவாக எட்டு மாவட்டங்களில் 87 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இதில் வன்னி, கொழும்பு, திருகோணமலை, புத்தளம் ஆகிய மாவட்டங்களும் அடங்குகின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## அச்சு ஊடகங்களின்

# தேர்தல் பிரசாரச் செய்திகள் இன்று நள்ளிரவுடன் முடிவடையும்

அச்சு ஊடகங்களின் தேர்தல் தொடர்பான பிரசார செய்திகள் இன்று நள்ளிரவுடன் நிறைவடையும். இவற்றுள் தேர்தல் தொடர்பான அரசியற் கட்டுரைகள் கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரங்கள், அரசியற்கட்சித் தலைவர்கள் மற்றும் சுயேற்சைக் குழுக்களின் பேட்டிகள் என்பன அடங்கும்.

ஆனாலும், அரசியற் கட்சிகளின் கூட்டம் இன்று நள்ளிரவுடன் முடிவடைவதால் அவை தொடர்பான செய்திகளை இலத்திரனியல் ஊடகங்கள் நாளை காலை ஏழு மணிக்கு முதலும் அச்சு ஊடகங்கள் வியாழனும் பிரசுரிக்க முடியுமெனவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு இந்தக் கூட்டங்களில் நடந்த செய்திகளை மாத்திரமே இலத்திரனியல் ஊடகங்களும் மற்றும் அச்சுஊடகங்களும் தெரிவிக்க வேண்டும். மாறாக இலத்திரனியல் ஊடகங்களின் பிரதம ஆசிரியர்களோ தமது கருத்துக்களை தெரிவிக்கமுடியாது எனவும் தேர்தல் ஆணையாளர் கடுமையாக உத்தரவிட்டுள்ளார்.

# ஷேவாக் குவித்த முச்சதங்களுடன் வலுவான நிலையில் இந்திய அணி!



இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் முல்தானில் நடைபெற்றுவரும் முதலாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாளான நேற்று, இந்தியா ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 675 ஓட்டங்களை எடுத்த நிலையில் தனது ஆட்டத்தை நிறுத்திக்கொள்வதாக அறிவித்தது.

முனனதாக முதல்நாள் ஆட்ட நேர முடிவின் போது, இரண்டு விக்கெட்டுக்களை இழந்து, 356 ஓட்டங்களைப் பெற்றிருந்த இந்திய அணி, நேற்று இரண்டாம் நாள் ஆட்டத்தில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து, 675 ஓட்டங்களைப் பெற்றது.

நேற்றைய ஆட்டத்தில் ஷேவாக், டெண்டுல்கர் ஜோடி மிகச் சிறப்பாக விளையாடி, அணியின் ஓட்ட எண்ணிக்கையை மிக வலுவான நிலைக்கு இட்டுச் சென்றது. இதில் ஷேவாக் 375 பந்துகளை எதிர்கொண்டு, 5 சிக்ஸர்கள், 39 பவுண்டரிகள் அடங்கலாக 309 ஓட்டங்களைக் குவித்தார். இந்திய கிரிக்கெட் அணி வரலாற்றில் தனி யொரு மனிதன் 300 ஓட்டங்களுக்கு மேல் பெற்றது இதுதான் முதல் தடவையாகும்.

சச்சின் டெண்டுல்கர் தனது 33 ஆவது சதத்தைப் பெற்றுக்கொண்டார். இவர் 348 பந்துகளில் 21 பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காமல் 194 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். இன்னுமொரு சதத்தைப் பெறுவதன் மூலம் டெண்டுல்கர் கவாஸ்கரின் 34 ஆவது சதத்தை சமப்படுத்திக் கொள்ளவுள்ளார்.

இருந்தபோதிலும் ஷேவாக் 375 பந்துகளில் ஓட்டங்களைப் பெற்ற அதே வேளை, டெண் டுல்கர் 348 பந்துகளில் 194 ஓட்டங்களையே பெற்றுள்ளார். இது டெண்டுல்கர் தனது சாதனைக்காக கூடுதலாக பந்தை வீணடித்தாரோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

அடுத்து லக்ஷ்மன் இரண்டாவது ஓட்டத்தைப் பெறுவதற்காக ஓடியபோது ரன் அவுட்டானார். இவர் 29 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த நிலையில் அடுத்து வந்தவர் யுவராஜ்சிங். இவர் அதிரடியாக ஆடி 66 பந்துகளில் 8 பவுண்டரிகள் அடங்கலாக 59 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். இவரது ஆட்டமிழப்புடன் இந்திய அணி தனது ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

இதில் ராவல்பிண்டி எக்ஸ்பிரஸ் என அழைக்கப்படும் சொகைப் அக்தர் மற்றும் முகமட் சமி ஆகிய சிறந்த பந்துவீச்சாளர்களின் பந்துகளை இந்திய துடுப்பாட்ட வீரர்கள் விளாசித்தள்ளியமையும் குறிப்பிடத்தக்கது.

பந்துவீச்சில் முகமட் சமி இரண்டு விக்கெட்டுக்களையும் சக்லைன் முஸ்தாக் மற்றும் இம்ரான் பர்கத் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதன்பின் தனது ஆட்டத்தைத் தொடங்கிய பாகிஸ்தான் அணி வீசப்பட்ட 16 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 42 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் இம்ரான் பர்கத் 17 ஓட்டங்களையும், தபீக் உமர் 20 ஓட்டங்களையும் பெற்றுள்ளனர்.

# பெற்றோருக்கும் வருங்கால மனைவிக்கும் இரட்டை சதத்தை சமர்ப்பிக்கிறார் ஷேவாக்!

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையேயான முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அதிரடி துடுப்பாட்ட வீரர் ஷேவாக், சிறப்பாக ஆடி இரட்டைச் சதம் அடித்தார். இதன்மூலம் அவர பாகிஸ்தான் மண்ணில் இரட்டைச் சதம் அடித்த 2 ஆவது வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

நேற்றுமுன்தினம் ஆட்டம் முடிந்ததும் ஷேவாக் பேட்டி அளித்தார் அப்போது அவர் கூறியதாவது -

பாகிஸ்தானுக்கு எதிராக பாகிஸ்தான் மண்ணிலே இரட்டை சதம் அடித்ததும் மகிழ்ச்சியாக இருந்தது. இந்த இரட்டை சதத்தை பெற்றோருக்கும் எனது வருங்கால மனைவிக்கும் சமர்ப்பிக்கின்றேன். நான் சாதனைக்காக ஆடவில்லை. சாதனை புரிந்தாலும் என் சாதனையை யாராவது நிச்சயம் முறியடிப்பார்கள்.

அக்தர், சமி போன்ற வேகப்பந்து வீச்சாளர்களின் பந்து வீச்சை எதிர்கொண்டு இந்த ஓட்டங்களை எடுத்தது மகிழ்ச்சியாக இருக்கிறது. இரட்டை சதத்தை கடந்த உடன் அதிரடியில் விளையாடுவதை குறைத்து இன்றைய ஆட்டத்தை முடிப்பதிலே கவனம் செலுத்தினேன்.

300 ரன்கள் எடுப்பதே எனது லட்சியம். இவ்வாறு அவர் கூறினார்

## விளையாட்டு

# நியூசிலாந்துடனான இறுதி டெஸ்ட்: தென்னாபிரிக்க அணி வெல்வதற்கு 162 ஓட்டங்கள் எடுக்கவேண்டும்!

(வெலிங்ரன்)

நியூஸிலாந்து - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் வெலிங்ரனில் நடைபெற்றுவரும் மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியின் நான்காம் நாளான நேற்று வெற்றி பெறுவதற்கு 244 ஓட்டங்களை எடுக்கவேண்டிய நிலையில் விளையாடத் தொடங்கிய தென்னாபிரிக்கா நேற்றைய ஆட்டநேர முடிவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 82 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

முன்னதாக மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவின்போது நியூஸிலாந்து தனது இரண்டாவது இனிங்சில் 5 விக்கெட்டுக்களை இழந்து 128 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. பின்னர் நேற்றைய ஆட்டத்தின்போது அவ்வணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 252 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதன்மூலம் தென்னாபிரிக்க அணி வெல்வதற்கு நியூஸிலாந்து 244 ஓட்ட எண்ணிக்கையை நிர்ணயித்தது.

நியூசிலாந்து அணி சார்பில் றிச்சட்சன் 37, சின்கிளெயர் 21, ஸ்ரைஸ் 73, கெயின்ஸ் 41, ஓரம் 40 ஆகியோர் ஓட்டங்களைக் கூடுதலாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் நிக்கிபோஜி 4, பொலக் மற்றும் நெல் இருவரும் தலா 2, என்ரினி 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

244 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் தனது இரண்டாவது இனிங்சைத் தொடங்கிய தென்னாபிரிக்கா, சற்று நேரத்துக்குள்ளேயே அதன் 3 முக்கிய விக்கெட்டுக்களை இழந்து தள்ளாடியது.

ஆரம்பத் துடுப்பாட்டக்காரர் கிப்ஸ் 16 ஓட்டங்களுடனும், றுடோல்ப் ஓட்டமெதுவும் பெறாமலும் கலிஸ் 1 ஓட்டத்துடனும் என 3 விக்கெட்டுக்கள் அடுத்தடுத்து சரிக்கப்பட்டன. அப்போது அணியின் எண்ணிக்கை 36. ஆனாலும் அணித் தலைவர் ஸ்மித் 46, ஹரி கேர்ஸ்டன் 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் 86 ஓட்டங்கள் வரை கொண்டுவந்துள்ளனர். இன்னமும் வெற்றி பெறுவதற்கு 162 ஓட்டங்கள் எடுக்கவேண்டும்.

பந்துவீச்சில் மார்ட்டின் 2, ஓரம் 1 விக்கெட்டைக் கைப்பற்றினர். தென்னாபிரிக்கா வென்றால் இரு அணிகளும் 1:1 என்ற நிலையில் சமநிலை வகிக்கும்.

# இலங்கை டெஸ்ட் அணித் தலைவர் தலைமை பதவியிலிருந்து விலகல்!



(கொழும்பு)

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வந்தது. இரு அணிகளுக்கிடையேயான ஒருநாள் தொடரை 3-2 என்ற கணக்கில் அவுஸ்ரேலியா கைப்பற்றியது. இதைத் தொடர்ந்து இரு அணிகளுக்கிடையே டெஸ்ட் போட்டி நடந்தது. இதில் இலங்கை அணிக்கு திலகரத்ன கப்டனாக இருந்தார். 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் அவுஸ்ரேலியா ஏற்கனவே 2 டெஸ்ட்களில் வென்று தொடரைக் கைப்பற்றியது. இந்நிலையில் கடைசி டெஸ்ட் தொடரின் போட்டி கொழும்பில் நடைபெற்று வந்தது. இதிலும் அவுஸ்ரேலியாவே வெற்றி பெற்றது. இதனைத் தொடர்ந்து கப்டன் பதவியில் இருந்து தான் விலகுவதாக திலகரத்ன அறிவித்தார்.

அடுத்த மாதம் இலங்கை அணி சிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் செய்து விளையாட உள்ளது. இதற்கு அத்தப்பத்து கப்டனாக நியமிக்கப்படலாம் எனத் தெரிகிறது.

இதேவேளை - கப்டன் பதவியிலிருந்து விலகுவதன் மூலம் தனது துடுப்பாட்டத்தை சிறப்பாக வெளிப்படுத்தலாம் எனவும் திலகரத்ன தெரிவித்தார்.

# இந்திய - பாகிஸ்தான் முதல் டெஸ்ட் சமநிலையில்தான் முடிவடையுமாம்!



## இம்ரான்கான் தெரிவிப்பு

இந்திய - பாகிஸ்தான் இடையேமுதல் டெஸ்ட் போட்டி முல்தானில் நடைபெற்று வருகிறது. இந்த டெஸ்ட் சமநிலையில் முடியும் என பாகிஸ்தான் முன்னாள் கப்டன் இம்ரான்கான் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது -

ஆடுகளம் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு சாதகமாக இல்லை. இந்திய அணி எப்படியும் 600 ரன்களுக்கு மேல் எடுக்கும். பாகிஸ்தான் அணியும் அதிக ரன்களை குவிக்கும். இதனால் இப்போட்டி யாருக்கும் முடிவின்றி சம நிலையில்தான் முடியும். பாகிஸ்தான் அணியில் களத்தடுப்பு மோசமாக உள்ளது. ஷேவாக் சிறப்பாக ஆடினார். அவரது துடுப்பாட்டம் புல்லட் வேகத்தை போல் உள்ளது என்றார்.

# முரளிதரனின் பந்துவீச்சில் சந்தேகம் எழுந்துள்ளதாம்!

## ஐ.சி.சி. நடுவர் தெரிவிப்பு

இலங்கை அணியின் முன்னணி சுழல் பந்துவீச்சாளர்களில் ஒருவர் முரளிதரன். அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் முரளிதரன் பந்துவீச்சு முறை சந்தேகமளித்ததாக ஐ.சி.சி. போட்டி நடுவர் திரேட் தெரிவித்தார்.

அதனைச் சரிசெய்யும்படி இலங்கை கிரிக்கெட் சபையை அவர் கேட்டுக்கொண்டுள்ளார். இது தொடர்பாக 6 வாரத்திற்குள் அறிக்கை தாக்கல் செய்வதாக இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

அடுத்த மாதத்தில் இலங்கை அணி சிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் செய்து விளையாடவுள்ளது. முன்னரும் பந்தை எறிவதாக முரளிதரன் மீது பலமுறை குற்றச்சாட்டு எழுந்துள்ளது குறிப்பிடத்தக்கது.



# பாட்டாளி மக்கள் கட்சியை தோற்கழக்க ரசிகர் மன்றங்களுக்கு ரஜினி உத்தரவு!

பாட்டாளி மக்கள் கட்சி போட்டியிடும் 6 தொகுதிகளிலும் அந்தக் கட்சியின் வேட்பாளர்களைத் தோற்கடிக்குமாறு தனது ரசிகர் மன்றங்களுக்கு நடிகர் ரஜினிகாந் உத்தரவு பிறப்பித்துள்ளதாக ரசிகர் மன்றத் தலைவர் சத்யநாராயணராவ் பகிரங்கமாகத் தெரிவித்தார்.

பா.ம.கவுக்கு எதிராக பகிரங்கமாகத் தேர்தல் களத்தில் குதிக்கிறார் ரஜானிகாந்த. இருப்பினும் அவர் நேரடியாகப் பிரசாரத்தில் ஈடுபடமாட்டார் என்றே தெரிகிறது. இது தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பை ரஜினியின் வலதுகரம் என்று கூறப்படும் ரசிகர் மன்றத் தலைவர் சத்தியநாராயணராவ் புதுவையில் அறிவித்தார்.

புதுவையில் ரஜினி ரசிகர் மன்ற செயல் வீரர்கள் கூட்டம் நடந்தது. அந்தக் கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் சத்தியநாராயண ராவ் பேசுகையில் -

பாட்டாளி மக்கள் கட்சி போட்டியிடும் புதுவை உள்ளிட்ட 6 தொகுதிகளிலும் அந்தக் கட்சியை எதிர்ப்பது என ரஜினிகாந்த் முடிவு செய்துள்ளார். இந்த 6 தொகுதிகளிலும் போட்டியிடும் அ.தி.மு.க. மற்றும் பா.ஜ.க. வேட்பாளர்களை வெற்றிபெறச்செய்ய வேண்டுமென தனது ரசிகர்களுக்கு என் மூலம் உத்தரவு பிறப்பித்துள்ளார் ரஜினிகாந்த்.

அ.தி.மு.க. வேட்பாளர்களை ஆதரிப்பதில் ரஜினிக்கு எந்தவித தயக்கமும் இல்லை. டாகடர் ராமதாஸைப் போல அ.தி.மு.க. தலைவர்கள் யாரும் ரஜினியை விமர்சித்தது கிடையாது. எனவே அவர்களை ஆதரிப்பதில் ரஜினி ரசிகர்களுக்கும் தயக்கம் இல்லை.

பாபா படம்வெளியானபோது நடந்த கசப்பான சம்பவங்களை ரஜினியும் சரி ரசிகர்களும் சரி இன்னும் மறக்கவில்லை ரஜினியைப் பற்றியும், ரஜினிகாந்தின் குணங்களை விமர்சித்தும் டாக்டர் ராமதாஸ் மிகவும் கொச்சைப்படுத்தி பேசியதையடுத்தே இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ராமதாஸ் எதிர்ப்பு உணர்வை ஜனநாயக ரீதியாக பா.ம.க.போட்டியிடும் 6 தொகுதிகளிலும் ரஜினி ரசிகர்கள் காட்டுவார்கள். அதாவது 6 தொகுதிகளுக்கும் அ.தி.மு.க. பா.ஜ.க.வேட்பாளர்களை வெற்றிபெறச் செய்வார்கள். நானும் இங்கு பிரசாரம் மேற்கொள்வேன்.

ரஜினி ரசிகர்களின் செயற்பாடுகளுக்கு எப்போதும் அ.தி.மு.க. தடையாக இருந்ததில்லை. பாபா பட விவகாரத்தின்போது கூட அ.தி.மு.க. ஆட்சியின் கீழ் உள்ள பொலிஸார் துரிதகதியில் செயற்பட்டு கலகம் செய்தவர்களை ஒடுக்கியது. கடந்தப்பட்ட பாபா படப் பெட்டிகளை உடனுக்குடன் பறிமுதல் செய்துவந்தது.

ஆனால் ரஜினியையும் ரசிகர்களையும் முட்டாள் என்று கூறுமளவுக்குத் தரம் தாழ்ந்து பேசியுள்ளார் ராமதாஸ். இதை நாங்கள் மன்னிக்கவே முடியாது என்றார் சத்யநாராயணராவ்.

# கமல்நாத் நீக்கம்

தமிழக காங்கிரஸ் வேட்பாளர்களைத் தேர்வு செய்யும் பணியிருந்து அகில இந்தியப் பொதுச்செயலாளர் கமல்நாத் நீக்கப்பட்டார். அவருக்குப் பதில் மன்மோகன்சிங் தலைமையிலான 3 பேர் கொண்ட குழு, வேட்பாளர்களைத் தெரிவு செய்யும்.

தமிழக காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் பட்டியலைத் தேர்வுசெய்யும் பொறுப்பு கமல்நாத்திடம் அளிக்கப்பட்டிருந்தது. ஆனால், இளங்கோவனுடன் சேர்ந்துகொண்டு, வாசனை அவர் புறக்கணிப்பதாக பேச்சு எழுந்தது. அதை நிரூபிக்கும் வகையில் அவர் கொடுத்த வேட்பாளர் பட்டியலில் யாருமே வாசன் ஆதரவாளர் இல்லை.

கொதித்தெழுந்த ஜி.கே.வாசன், வேட்பாளர் தேர்வுக்குழுக் கூட்டத்தைப் புறக்கணித்துவிட்டு வெளியேறினார். பின்னர் கமல்நாத் கூறும் பட்டியலை தான் ஏற்கப்போவதில்லை என கட்சி மேலிடத்தில் தெளிவாகக் கூறிவிட்டு சென்னை திரும்பிட்டார்.

இந்நிலையில் வாசனை சமாதானப்படுத்தும் முயற்சிகள் நடந்தன. கருணாநிதியும் சோனியாவுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பிரச்சினையை விரைவாக முடிவுக்குக் கொண்டு வருமாறு கோரிக்கை விடுத்தார்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# ஆட்சியமைப்பது யார் என்பதை நாமே தீர்மானிக்க வேண்டும்



## பிரசாரக் கூட்டத்தில் சுரேஷ் பிரேமச்சந்திரன்

நடைபெறவுள்ள நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்மூலம், யார் ஆட்சி அமைப்பது என்பதை தீர்மானிப்பது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். வேட்பாளரான க.சுரோஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

நல்லூர் சங்கிலி அரங்கில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது -

இந்தத் தேர்தல் தமிழருக்கு ஒரு புதுவருடமாக அமையவேண்டும். 20 வருடமாக இடம்பெற்ற யுத்தத்தில் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ்மக்கள்தான். தற்போது, இடம்பெற்றிருக்கும் யுத்த நிறுத்தத்தின்மூலம் தமிழர்கள் மூச்சுவிடக்கூடிய அளவிற்கு மட்டும்தான் விட்டிருக்கிறார்கள்.

ஆனால், அது முழுமையானது அல்ல. யாழ். குடா நாட்டின் 30 வீதமான நிலப்பரப்பு இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ளது. தற்போது மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றார்கள். எந்த வீதியில் சென்றாலும், இராணுவ முகாம்களைத் தாண்டிச் செல்லவேண்டிய நிலைதான் இப்போது உள்ளது. தமிழர்களுக்கு - நிலம், மொழி, கலை, பண்பாடு, பொருளாதார வளம் என்பதெல்லாம் இருந்தும்கூட, தமிழர்கள் சொந்தக் காலில் நிற்க முடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலையில் உள்ளோம். இந்தநிலை நீக்கப்படவேண்டும்.

முக்கியமாக தமிழர்களின் உரிமைகள், தமிழர்களின் அபிவிருத்திகள் என்பன கவனமெடுக்கப்பட வேண்டும். எனவே, நாங்கள் தமிழர்களின் எதிர்காலம் பற்றிச் சிந்தித்துத்தான் எமது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டுள்ளோம். எமக்கெதிராக சில தமிழ்க் கட்சிகள், சுயேட்சைக்குழுக்கள் உள்ளன. ஒவ்வொரு கட்சிக்கும், ஒவ்வொரு அரசியல் நோக்கு இருக்கலாம்.

ஆனால், அவை தமிழ் மக்களின் விடிவிற்கு பாதகமாக இருக்கக்கூடாது. ஒவ்வொரு கட்சிக்கு இடையில் பிரச்சினைகள் இருக்கலாம். அவற்றைப் பேசித் தீர்க்கலாம். அது இல்லாமல், தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க ஒன்றிணைந்து செயற்படவேண்டுமா? இல்லையா என்று சிந்தித்துப்பாருங்கள்.

வடக்கும் - கிழக்கும் இணைக்கப்பட்ட பிரதேசம் எமக்குக் கிடைத்த பெரும் பாக்கியமாகும். வடக்கையும்-கிழக்கையும் பிரிப்பதற்கு தமிழ் மக்கள் எவருமே அனுமதிக்கமாட்டார்கள். இதனைக் கருணாவும் புரிந்துகொள்ளவேண்டும். எமது இந்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெறும் நான்கு கட்சிகள் இணைக்கப்பட்டதல்ல, கூட்டுறவு மற்றும் வெவ்வேறு அமைப்புகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட அமைப்பாகும்.

இலங்கை அரசாங்கம் வெளிநாட்டு உதவி இல்லாமல் ஆட்சியமைக்க முடியாது. 7500 கோடி ரூபா இந்த யுத்தத்திற்காக வருடாந்தம் செலவிடப்படடுள்ளது. ஆனால், அந்தப் பணத்தால் பலஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புப் பெற்றுக்கொடுக்கலாம். அல்லது பல அபிவிருத்தி வேலைகளுக்குப் பயன்படுத்தி இருக்கலாம். இவை எந்த வருமானமும் இன்றி செல விடப்பட்டிருக்கின்றன. எனவே, எதிர்வரும் தேர்தலில் வீட்டுச் சின்னத்திற்கு 85 வீதத்திற்குமேல் வாக்களித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றிக்கு வாக்களிக்க வேண்டும்.

இதன்மூலம் - 20, 22 ஆசனங்களைப் பெற்று - ஒரு தொங்கு நாடாளுமன்றம் அமைத்து, அடுத்து யார் ஆட்சிஅமைப்பது என்பதை நாமே தீர்மானிக்கக் கூடிய நிலை ஏற்படும். இதன்மூலம் எமது மக்களுக்கு ஒரு நல்ல தீர்வைப் பெற்றுத்தரமுடியுமெனக் குறிப்பிட்டார்.

# கூட்டமைப்பின் இறுதிப் பிரசாரக்கூட்டம் நல்லூர் ஆலய முன்றலில் நடைபெறும்

தமிழ்க் கூட்டமைப்பின் இறுதி பிரசாரப் பொதுக்கூட்டம் - யாழ. மாவட்டத்தில் நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் இடம்பெற ஏற்பாடாகியுள்ளது. இந்தப் பொதுக்கூட்டத்தில் தமிழ் கூட்டமைப்பினரின் 12 வேட்பாளர்களும் கலந்துகொள்வதுடன், விடுதலைப் புலிகளின் அரசியற்துறையைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்களும் கலந்துகொண்டு சிறப்புரைகளையும், கருத்துரைகளையும் வழங்கவுள்ளனர்.

இந்த நிகழ்வானது இன்று மாலை 6 மணிக்கு ஆரம்பமாவதுடன், இறுதி நிகழ்வாக புகழ் பூத்த பாடகரான - எஸ்.ஜி.சாநதன், நிரோஷன் உட்படப் பல முன்னணிப் பாடகர்களும், படகிகளும் கலநதுகொள்ளும் இசைநிகழ்வும் இடம்பெறவுள்ளது. யாழ். மாவட்டத்திலிருந்து சகல பிரதேச கூட்டமைப்பு ஆதரவாளர்களும் இம்முறை இந்தப்பொதுக் கூட்டத்தில் பெரும் திரளாக கூடுவார்கள் என எதிர்பார்ப்பதாக கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (205)

### மண்கும்பானில் காண்பிக்கப்படவிருந்த

# 'அம்மா நலமா' திரைப்படத்தை தடைசெய்ய முற்பட்ட கடற்படையினர்

கடந்த செவ்வாய்க்கிழமையன்று மண்கும்பான் கிராம அபிவிருத்திச் சங்க முன்றலில் காண்பிக்கப்படவிருந்த - 'அம்மா நலமா' திரைப்படத்தை கடற்படையினர் தடை செய்ய முற்பட்டனர். இதன்போது, அங்கு கூடியிருந்த மக்கள் ஆத்திரமடைந்து வீடுகளுக்குக் கலைந்து சென்றனர்.

இதனையடுத்து, இந்தத் தகவலானது போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு அறிவிக்கப்பட்டது. உடனடியாகச் சம்பவ இடத்திற்கு வந்த போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் - போர்க் காலத்தை சித்திரிக்கும் படம் போட முடியாது என்றும், இதனை உடனடியாக நிறுத்துமாறும் கூறினர்.

இதையடுத்து, போர்க்காலத்தை சித்திரிக்கும் படம் அல்ல எனவும், சாதாரண கதையுடன் உருவாக்கப்பட்ட படம் எனவும் - போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்குப் போட்டுக்காட்டப் பட்டது.

இதனைத் தொடர்ந்து போர் நிறுத்தக் கண்காணிப்பக் குழு-கடற்படை தளபதியுடன் உரையாடி, தொடர்ந்து இந்தத் திரைப்படம் போடலாம் என அனுமதி வழங்கியது.

இதனையடுத்து மீண்டும் மக்கள் அனைவரும் படத்தைப் பார்த்தனர். கடற்படையினரின் இந்தச் செயலானது ஒரு வருந்தத்தக்க செயல் என மககள் கவலை தெரிவித்தனர். (53)

## சின்னஞ்சிறு செய்திகள்

### கடும் வரட்சியால் விவசாயம் பாதிப்பு

(மண்கும்பான்)

மண்கும்பானில் நிலவிவரும் கடும் வரட்சியால் - விவசாயிகள் தங்கள் விவசாய நடவடிக்கையை கைவிட்டுள்ளனர். இதனால், இவர்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

கடும் வரட்சியால் நீர் நிலைகளில் நீர் வற்றிவருவதாகவும், மணல் பிரதேசம் ஆகையால் கூடிய நீர் தேவைப்படுவதாலும், வரட்சியால் பயிர்களுக்கு நோய்கள் ஏற்படுவதாலுமே தாங்கள் விவசாயத்தை கைவிடவேண்டிய நிலையிலுள்ளது. இதனால், தாங்கள் பல கஷ்டங்களை அனுபவித்து வருவதாகவும் தெரிவித்தனர். (53)

### பசுந்தோகை சஞ்சிகை வெளியீடு

விவசாயபீட மாணவர் ஒன்றியத்தினால் வருடாவருடம் வெளியிடப்படுகின்ற - 'பசுந்தோகை' சஞ்சிகை வெளியீட்டு விழா - இன்று பிற்பகல் 3.30 மணியளவில் விவசாயபீட பிரதான மண்டபத்தில் வெளியிடப்படவுள்ளது.

### ஆரம்ப கணித செயலமர்வு

தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளின் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான ஆரம்ப கணித செயலமர்வு - எதிர்வரும் 6, 7 ஆம் திகதிகளில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் காலை 8.30 மணி முதல் 4.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வில் சகல ஆரம்பக்கல்வி ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா தெரிவித்துள்ளார். (25)

## இனிய பிறந்தநாள் 1 வாழ்த்துக்கள்

### முதலாவது அகவையில்



பெயர் : சி.ஷாயித்தியன்
முகவரி : நம்பித்தாவத்தை, பொலிகண்டி.

### ஒன்பதாவது அகவையில்



பெயர் : இ.கௌரி வானுசன்
முகவரி : இளவாலை வடக்கு, இளவாலை.

### வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:-----------------

முகவரி :-----------------

பிறந்த ஆண்டு:-----------------



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------
பெற்றோர் ஒப்பம்



யாழ்.எழுவைதீவு முருகவேள் வித்தியாலய வருடாந்த மெய்வல்லுநர் போட்டியின்போது - பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட தீவக கல்வி வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஜீ.வி.இராதாகிருஷ்ணன் மங்கள விளக்கேற்றுவதையும், அருகிலே வேலணை கோட்டக்கல்விப் பணிப்பாளர் சோ.தில்லைநாதன், வணபிதா.அ.யேசுதாஸ் அடிகளார், கல்லூரி அதிபர் தி.சிவபாலன் ஆகியோரைப் படத்தில் காணலாம். (83)



யாழ்.கற்கோவளம் மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு புதிய இரு மாடிக் கட்டடத்திற்கான நிதியை நிகொட் நிறுவனம் வழங்கியது. இதற்கான அடிக்கல் நாட்டு விழாவில் - நிக்கொட் நிறுவனத் திட்டப்பணிப்பாளர் த.லங்காநேசனுக்கு பாடசாலை அதிபர் ஆ.மகேசு மாலை அணிவித்து வரவேற்பதைப் படத்தில் காணாம். (12)

# அரச ஊழியர்களிடம் தபால்மூலம் ஆதரவுகோரும் வேட்பாளர்கள்

யாழ்.மாவட்டததில் போட்டியிடும் கட்சிகளின் வேட்பாளர்கள் பலரும் தனிப்பட்ட முறையிலும், கட்சிரீதியிலும் தபால்மூலம் ஆதரவினை திரட்டி வருகின்றனர்.

தபால் மூலம் வாக்களிப்பு நிகழ்வதற்குமுன், அதிகளவில் வந்த இத்தகைய துண்டு பிரசுரங்கள் தபால் மூலவாக்களிப்பு முடிந்ததும் தொடர்ந்து அரச ஊழியர்களுக்கு கிடைத்தபடியுள்ளது.

தமிழர் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் சீ.வி.கே.சிவஞானம், சிவமகாராசா, சுரேஸ்பிரேமச்சந்திரன் கஜேந்திரகுமார், கஜேந்திரன் போன்றவர்களினது துண்டுப்பிரசுரங்கள் - பாடசாலைகளுக்கும், அரச ஊழியர்களுக்கும் அவர்கள் பணிபுரியும் இடங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றது.

இதேபோல், ஈழமக்கள் ஜனநாயக் கட்சி மற்றும் ஆனந்தசங்கரி தலைமையிலான சுயேட்சைக்குழு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்றவற்றின் தேர்தல் தொடர்பான துண்டுப்பிரசுரங்களும், தேர்தல் விஞ்ஞாபணங்களும் இவ்வாறு கிடைத்த வண்ணமுள்ளன. (58)

# பாதுகாப்பு நிலையத்திலிருந்து சைக்கிள் காணாமற்போயுள்ளது

யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாகவுள்ள சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள் காணாமறபோயுள்ளது என உரிமையாளர் யாழ். பொலீஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த முறைப்பாட்டை ஆனைப்பந்தியில் வசிக்கும் புலேந்திரகுமார் யசோதா என்பவரே செய்துள்ளார். சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

நேற்றுமுன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் சைக்கிளை நிறுத்திவிட்டு, வைத்தியசாலைக்குச் சென்று விட்டு மீண்டும் சைக்கிள் எடுக்க வந்தபோது, சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் சைக்கிள் இல்லை. இதனை அடுத்து சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் வழங்கப்பட்ட சிட்டையுடன் இந்த நபர் யாழ்.பொலிஸ் நிலையத்திற்குச் சென்று முறைப்பாடு செய்துள்ளார். (தீ)

### குழாய் மூலம் விநியோகிக்கப்படும்

# குடிநீர் பாவனையை கட்டுப்படுத்தத் தீர்மானம்

நெடுந்தீவுப் பகுதியில் குழாய் மூலம் விநியோகிக்கப்பட்டுவரும் குடிநீரின் பாவனையைக் கட்டுப்படுத்தும் தீர்மானம் ஒன்று கடந்தவாரம் இடம்பெற்ற நெடுந்தீவு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

இந்த வருடத்தில் மழைவீழ்ச்சி குறைந்த காரணத்தால், குடிநீர் உவர்த்தன்மையாகி வருகின்றது. இதனால், குடிநீரின் பாவனையை மட்டுப்படுத்த வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. மேலும், நெடுந்தீவில் நிலைகொண்டுள்ள பொலிஸார் மற்றும் கடற்படையினர் இந்தக் குடிநீரை வேறு தேவைகளுக்காக அதிகளவு பயன்படுத்தி வீண்விரையம் செய்வதனால், இவர்களுக்கு வழங்கும் குடிநீரின் அளவினை மட்டுப்படுத்துவதற்கு ஆலோசிக்கப்பட்டதுடன், இது தொடர்பாக குறிப்பிட்டவர்களுடன் கலந்துரையாடி முடிவெடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது. (113)


தமிழ் இனத்தின் அரசியல் பலத்தினை தீர்மானிக்கின்ற தேர்தல்
இளம் தலைவன், சலுகைகளுக்கு விலை போகாதவன்,
எம் இனத்தின் விடுதலைக்கு வலுச்சேர்க்கும்
உன்னத இலட்சியவாதி
செல்வராஜா கஜேந்திரன்
(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் யாழ். மாவட்டம்)
☆ தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள்
☆ தமிழ் மக்களின் அபிலாஷை எமது மரபுவழித் தாயகத்தில் ஒரு தேசிய இனமாக சுய நிர்ணய உரிமையுடனான வாழ்வு இதுவே எமது அரசியல் இலக்கு
☆ எமது போராட்டம் உரிமைக்கான போராட்டம் என்பதை சர்வதேச உலகிற்கு உணர்த்தவும், மக்களின் இனப்பிரச்சினையை உண்மைத் தன்மையோடு எடுத்துரைக்கவும் -
வீட்டுக்கு நேரேயும் பத்தாவது இலக்கத்து மேலேயும் புள்ளடியிட்டு
உண்மைக்கும் நேர்மைக்கும் இலட்சியப் பற்றுக்கும் வாக்களித்து
தமிழின விடுதலைக்கு பலம் சேர்ப்போம்
X 10
- குடாநாட்டு மக்கள்

# ஓயாத தமிழ்ப் பேரலையாய் எழுக!

## ஒன்றுபட்டு தமிழினத்தின் உரிமையினை வெல்க...!!

**வன்னி சமர்க்களத்தில் நின்று வாகை சூடியோரை**

**தேர்தல் களத்திலும் வாகை சூட வைப்பீர்**








கூட்டுறவாளர்களாக...
தேசிய எழுச்சி பேரவை உறுப்பினர்களாக...
போர் எழுச்சிக் குழுவினராக...
எல்லைப்படை வீரர்களாக...

**மண்ணினதும், மக்களினதும் விடுதலைக்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றியவர்கள்**

**இவர்களுக்கு வாக்களிப்பது எங்கள் கடமையல்லவா?**

தமிழ்த் தேசிய நலன் காக்கும் சபை
- யாழ்.மாவட்டம்.

(சி/2361)






நெருப்பை மனிதர்கள் தமது தேவைகளுக்காக எப்போது பயன்படுத்த ஆரம்பித்தனர் என்பதை அறிந்துகொள்வதற்கு அமெரிக்கா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ஆய்வுகளை மேற்கொண்டனர். 1.5 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த ஆதி மனிதர்கள் நெருப்பினை குளிர்காய்வதற்கும் வேறு தேவைகளுக்கும் பயன்படுத்தியுள்ளனர் என அவர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்த ஆய்வினை மேற்கொள்வதற்கு தயில் எரிந்த எலும்புத்துண்டுகளைப் பயன்படுத்தியுள்ளனர்.

காட்டுத்தீ அல்லது மரங்கள் ஒன்று

# வெப்பமும் நெருப்பும்

டன் ஒன்று தொடர்ந்து உரசிக்கொள்வதன்மூலம் தீ உண்டாகி எலும்புகள் எரிந்திருக்கலாம் என்ற சந்தேகமும் தோன்றியிருந்தது. இதனால் நவீன விஞ்ஞான முறையில் பரிசோதனைகள் மேற்கொள்ள வேண்டியிருந்தது. இயற்கையான காட்டுத்தீ ஏற்படும்போது வெப்பநிலை 300 பாகை வரை உயர்வதாகவும் கண்டறிந்தனர். ஆனால், குளிர்காய்தலுக்காக அல்லது அடுப்புகளை சூடேற்றும் நிலையில் வெப்பம் 600 பாகை வரை உயரமுடியும் எனவும் கணித்திருந்தனர். மேலும் வெப்பநிலை அதிகரிக்கும்போது, காபன் மூலக்கூறுகளில் ஏற்படும் மாற்றங்களையும் அவதானித்துள்ளனர். இதனால் மூலக்கூறுகளில் இலத்திரன்களில் ஏற்பட்ட மாற்றங்களை நிறப்பிரிகைக்கு உட்படுத்தி அவற்றின் காலப்பகுதியினை அறிந்துகொண்டனர்.

# திரை விமர்சனம்

## களம்



காசி, என்மனவானில் ஆகிய படங்களை இயக்கிய வினயனுடைய படம் இது. ஆனால் மலையாள டப்பிங் படம். கார்கில் போர் நடந்த கால கட்டத்தில் எடுக்கப்பட்ட ஒரு கதையம்சம் இதுவாகும். எல்லைப்பகுதியில் கடத்தப்பட்ட கிராம மக்களை மீட்கப்போகும் லெப்டினன்ட் கேணல் சரத்சந்திரன் (பிரபு) மற்றும் அவரின் குழுவினர் பாகிஸ்தான் நாட்டு இராணுவத் தளபதி ஜாபர்கான் என்பவரால் காட்டிக் கொடுக்கப்பட்டு கைது செய்யப்படுகிறார்கள்.



அவர்கள் அனைவரும் உயிர் தியாகம் செய்து இந்தியாவுக்கு நேர இருந்த அணு ஆயுத தாக்குதலை நிறுத்தி, கப்டன் கோபி (திலீப்) மற்றும் ஜாபர்கான் மகள் ஜரீனா (லைலா) ஆகியோர் தப்பிப்பதும் தான் முழுக்கதையும்.

இது ஒரு இராணுவக் கதை மாதிரி இல்லை. படுபயங்கரமான தீவிரவாதி மன்சூர் அக்தருக்கு ஏற்பட்ட திடீர்முடிவு கதையில் நல்ல திருப்பம். பிரபு குழுவினர் எல்லோருக்கும் தமிழ் தெரியும் என்பதாலும் எல்லோரும் தப்பிப்பதற்காக தமிழிலேயே பேசிக் கொள்வதும் ஒரு சிறுபிள்ளைத்தனம்.

கலாபவன் மணி செய்வது நகைச்சுவையா? வில்லத்தனமா ஒன்றுமே புரியவில்லை- அழகப்பனுடைய ஒளிப்பதிவு பரவாயில்லை. பாடல்கள், சண்டைக்காட்சிகள் ஏமாற்றிவிட்டன. களம் வெற்றியில்லை.

- PNS

# அலர்ஜி



சில குழந்தைகள் பிறந்தவுடன் ஒவ்வாமை என்ற சிக்கலால் அவஸ்தைப்படுகின்றன. இது பெரும்பாலும் 6 மாத பருவத்திலேயே தோன்றுகின்றது. இதற்குக் காரணம் 6 மாதத்திற்குப் பிறகு குழந்தைக்குக் கொடுக்கப்படுகின்ற திண்ம உணவுகள். தற்போது வைத்தியர்கள் குழந்தைகளுக்கு தாய்ப்பாலை அதிகம் புகட்டுமாறு அறிவுறுத்தி வருகின்றார்கள். ஏனெனில் இது ஒவ்வாமை இல்லாத பூரண உணவாகும். குழந்தைகளுக்கு ஒவ்வாமை இயல்பை இல்லாமல் செய்ய மரக்கறிகள், புதிய வாழைப்பழங்கள் மற்றும் பியர்ஸ பழங்களைக் கொடுததல் நல்லது. கட்டாயம் பசுப்பால், மீன், முட்டை ஆகியன தவிர்க்கப்படல் வேண்டும். ஆறு மாதக் குழந்தைகளுக்கு ஒவ்வாமை என்கிற அலர்ஜியைக் கட்டுப்படுத்த ஆரம்பிக்கும்போது ஆஸ்மா வருகின்றது. அத்துடன், சில குழந்தைகள் எக்சிமா நோயுடனும் அவதிப்படுகின்றார்கள். பல ஆராய்ச்சிகளின் விளைவாக பெண்குழந்தைகளிலும் பார்க்க ஆண்குழந்தைகளே அதிகம் பாதிக்கப்படுவதாகவும் கருதப்படுகிறது.

# இதய பம்பி

57 வயதுடைய ஜிம் பிரைட்டின் இருதயம் மிகவும் பலவீனமடைந்திருக்கிறது. இரு வாரங்கள் மாத்திரமே உயிர்வாழ முடியுமென வைத்தியர்கள் தெரிவித்திருந்தனர். எந்த நேரத்திலும் மரணம் நிகழலாம் என்ற பயத்தில் அவர் வாழ்ந்து கொண்டிருந்தார். இருதய மாற்றுச் சிகிச்சை (**HEART TRANSPLANT**) ஒன்றைத் தாங்கிக் கொள்ள முடியாதளவிற்கு அவரது இதயம் பலவீனமடைந்திருக்கிறது. இறுதியாக செயற்கை இதயம் ஒன்றை 'ஜிம்' இன் பழுதடைந்த இதயத்தின் அருகில் பொருத்துவதென முடிவெடுக்கப்பட்டது. பிரித்தானியாவில் புகழ்பெற்ற இருதயச்சிகிச்சை நிபுணரான 'ஸ்டீவ்' தலைமையில் 20 பேர் கொண்ட குழுவொன்று தேர்ந்தெடுக்கப் பட்டது.



முதலில் செயற்கை இருதயம் - பழுதடைந்த இருதயத்தின் அருகில் இரத்த நாளங்களும், நாடிகளும் பொருந்தக் கூடியவாறு இணைக்கப்பட்டது. அடுத்த செயற்கை இருதயம் சுருங்கி விரிவதற்குத் தேவையான மின் சக்தியை வழங்குவதற்கு குறிப்பிட்ட கால இடைவெளியில் மின்சாரம் தொடர்ந்து வழங்கப்படவேண்டியிருந்தது.

இதைப் பூர்த்தி செய்வதற்கு நெஞ்சிலிருந்து மண்டை ஓட்டில் துவாரமிட்டு, உடலின் வெளிப்பாகத்தில் மின்னை வழங்கக் கூடியவாறு மின் வழங்கி பொருத்தப்பட்டது. சத்திர சிகிச்சை வெற்றிகரமாக முடிக்கப்பட்டு ஜிம் தற்போது ஆரோக்கியமாக வாழ்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மிருகத்தின் மூலம் நோய்



ஆரம்ப காலத்தில் காணப்படாத நோய்கள் இன்று மனிதனைத் தாக்கிவருகின்றன. பல நோய்க்கிருமிகள் மிருகங்களிடமிருந்து மனிதர்களுக்குப் பரவியுள்ளதையும் அவதானிக்க முடிந்தது.

பல காட்டு மிருகங்களின் இறைச்சிகள் (**Bush Meats**) சட்டவிரோதமாகக் காடுகளிலிருந்து கடத்திவரப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. இதனால் அந்த மிருகங்களிடையே காணப்படும் வைரஸ் கிருமிகள் மனிதர்களுக்குத் தொற்றிக்கொள்கின்றன. எச்.ஐ.வி (**H.I.V**) எனப்படும் நோய்க் கிருமிகள் மிருகங்களிடமிருந்தே மனிதர்களுக்கு தொற்றிக்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வகையான நோய்க் கிருமிகளின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு, அந்த மிருகங்களை வேட்டையாடுவது தவிர்க்கப்படவேண்டும் என ஜோன் கொப்கின்ஷ் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். மேலும், குரங்கு, ஓொரில்லா, சிம்பன்சி ஆகியவற்றின் இறைச்சிகள் மனிதப்பாவனைக்கு தடைசெய்யப்பட வேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். மிருகங்களிடமிருந்து வைரசுக்கள் - நேரடியாக மனிதர்கள் அவற்றுடன் தொடர்புகொள்ளாதவரை தொற்றிக்கொள்வதில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

ஆபிரிக்க நாடான கமரூனில் காட்டு மிருகங்களுடன் நேரடியான தொடர்புகள் காணப்படுவதால் இந்தநோய் அங்கு அதிகளவில் காணப்படுவதாகவும் ஆய்வுகளில் அறிந்துள்ளனர்.

கையடக்கத் தொலைபேசிகள் காட்டும் அற்புதங்கள் ஏராளம். அதிலும் தானியங்கிப் பணப்பரிமாற்ற முறை (**AUTOMATED TELLER**). இதுகூட கையடக்கத் தொலை பேசிகள் மூலம் செய்து முடிக்கக் கூடியவாறு இருப்பதாக ஐரோப்பிய மொபைல் ஸ்தாபனம்

# அற்புதமே அற்புதம்

ஒன்று அறிவித்திருக்கிறது. பெரும்பாலும் ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதிக்குப் பிறகு இந்த புதிய முறை பாவனைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏறக்குறைய இப்படியான 7000 இயநதிரங்களைக் கொண்ட நட்வெஸ்ட் மற்றும் றோயல் ஆகிய வங்கிகள் ஸ்கொட்லாந்தில் காணப்படுகின்றன. அவற்றின் மூலம் ஒரு தடவையில் கையடக்கத் தொலைபேசியைக் கொண்டு 10 ஸ்ரேலிங்பவுண் முதல் 50 ப்வுன்ஸ் வரை எடுக்கக் கூடியவாறு இருக்கும்.



கூடுதலாக ஒரேஞ் வொடபோன, டி மொபைல் மற்றும் ஜேர்ஜின் ஆகிய கையடக்கத் தொலைபேசி, நெட்வேக் ஸ்தாபனங்கள் இப்படியான முயற்சியில் 2002 இலிருந்து ஈடுபட்டு வருகின்றன.

# புகை உடலுக்குப் பகை

முதுமையில் புகைத்தல் பழக்கத்தைக் கொண்டவர்கள் மத்தியில் மூளையின் செயற் திறன் வேகமாகக் குறைந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. முதுமையில் புகைப்பிடிப்பவர்கள் மத்தியில் மூளை செயலிழக்கும் வேகம் 5 மடங்காக அதிகரித்துக்கொண்டு செல்வதாகவும்



தெரிவிக்கப்பட்டுள்ளது. 65 வயதை அடைந்தவர்கள் மத்தியில் நரம்புத் தொகுதி தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டபோது இவ்வுண்மை தெரிந்துள்ளது. புகைப்பிடிப்பவர்கள் கூடுதலான மன அழுத்தம், மூளையின் இரத்தக் குழாய்களில் அடைப்பு ஆகிய வற்றால் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. புகைத்தல் - இருதயம், சுவாசத் தொகுதியை பாதிப்பதோடு மாத்திரமல்லாது, மூளைக்கலங்களையும் பாதிக்கின்றது. அத்துடன் முதுமையில் புகைப்பிடித்தல் பழக்கத்தை நிறுத்திக்கொண்டவர்கள் மத்தியில் மூளையின் செயற்பாடுகளில் முன்னேற்றத்தை அவதானித்ததாகவும் தெரிவித்துள்ளனர்.

# நீருக்கடியில் புலனாய்வு



நீருக்கடியில் வாழும் உயிரினங்களின் செயற்பாடுகளை அவதானிப்பதற்கு கடலோடிகள் (Divers) கமராக்களின் உதவியுடன் படம் பிடித்து வந்தனர். ஆனால், மனிதர்கள் கமராக்களுடன் படம் பிடிப்பதற்கு முற்படும்போது, தமது இயற்கையான செயற்பாடுகளை அவை மாற்றிக் கொள்வதையும் அவதானித்துள்ளனர்.

இதனால் அவற்றின் உடலில் சிறிய கமராக்களைப் பொருத்தி, அவற்றுக்குத் தெரியாமல் அந்த உயிரினங்களின் நடவடிக் கைகளை ஆராய முற்பட்டனர். அண்



மையில் பென்குயினின் உடலில் சிறிய கமராக்களை பொருத்தி அவற்றின் செயற்பாடுகளை அவ தானித்துள்ளனர்.

பென்குயினகள் - துருவப் பகுதியில் வாழும் பறக்க முடியாத ஒரு பறவை இனமாகும். இவற்றின் இறக்கைகள் துடுப்புகள் போன்று நீருக்கடியில் செயற்படக்கூடிய வாறு இசைவாக்கம் பெற்றுள்ளன.

நீருக்கடியில் கூட்டமாகச் சென்று தமது உணவை அவை தேடிக்கொள்கின்றன என்பதை அறிந்து கொண்டனர். கூட்டமாகச் செல்வதன்மூலம் தமது எதிரிகளிடமிருந்து தம்மை எவ்வாறு பாதுகாத்துக் கொள்கின்றன என்பதையும் கண்டுகொள்ள முடிந்தது.

# பொலிஸ் கார்

உலகளாவிய ரீதியில் பெரும்பாலான நாடுகளில் பொலிஸ் துறையினருக்குக் கார்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்தக் கார்கள் சாதாரண கார்கள் போலல்லாது மிகவும் அதியுன்னத தொழில்நுட்ப வல்லமைகளைத் தன்னகத்தே கொண்டனவாகக் காணப்படுகின்றது. கணனித் தொழில்நுட்ப உலகின் ராஜாவான IBM உம் கிற்றாட்சி மற்றும் நிஷான் கம்பனியும் சேர்ந்து கார்களில் டிஜிட்டல் அமைப்புக்களை உருவாக்கியிருக்கின்றன.



இந்தக் கார்கள் பொலிஸாருக்க மிகவும் பயன்படக் கூடியவாறு வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்தக் கார்களில் டிஜிட்டல் கமாராக்கள் காணப்படுகின்றன.

அத்துடன் ஸ்கானரும் காணப்படுகின்றன. அதனைவிட இங்கே காணப்படும் VHS அமைப்பு மிகவும் துல்லியமான துப்புத்துலக்கக் கூடியவாறுள்ளது. தற்போது இந்தக் கார்கள் ஐரோப்பிய நாடுகளில் பொலிஸாரால் பயன்டுத்தப்பட்டு வருகின்றன.

- இனி கிரிமினல் வயிற்றில் புளிதான்.

# மார்புப் புற்றுநோயும் விட்டமின் C யும்

மார்புப் புற்றுநோயைத் தடுப்பதில் விட்டமின் C உதவுவதாக ஆய்வுகள் தெரிவித்துள்ளன. பேர்மிங்கம் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் மேற்கொண்ட ஆய்வுகள் மூலம் - மார்புத் தசைகளில் காணப்படும் ஒரு வகை நொதியம் விட்டமின் C யினால் தூண்டப்படுவதாகத் தெரிவித்துள்ளனர்.



புற்றுநோயைத் தடுப்பதற்கு மார்புக் கலங்கள் உற்பத்தி செய்யும் நொதியத்தில் கூடுதலான அளவில் விட்டமின் C காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

கல்சிரியோல் எனப்படும் விட்டமின் C - கிட்னியில் உற்பத்தி செய்யப்படுவதாக ஆரம்பத்தில் கருதப்பட்டிருந்தது. இதனால் புற்றுநோய்கான எதிர்ப்பு சக்தி, மார்பகக் கலங்களில் உருவாக்கப்படுவதாக தற்போது கருதப்படுகிறது. அதிகரித்து வரும் மார்புப் புற்றுநோய்க்கான காரணம் - குறைவாக விட்டமின் C உடலில் காணப்படுவதெனத் தீர்மானித்துள்ளனர். விட்டமின் C - சூரிய ஒளியில் உடல் காய்பவர்கள் மத்தியிலும், சூரிய ஒளி அதிகம் உள்ள நாடுகளில் வாழும் மக்கள் மத்தியிலும் அதிகரித்துக் காணப்படுவதாகவும், குளிர் மிகுந்த நாடுகளில் வாழும் மக்களிடையே புற்றுநோயை எதிர்த்துப்போராடும் விட்டமின் C குறைவாகக் காணப்படுவதாகவும், இதனால் குளிர் நாடுகளில் மக்கள் உணவில் அதிக அளவிலான விட்டமின் C யினைச் சேர்த்துக்கொள்ளவேண்டுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

# கொரில்லா

மத்திய ஆபிரிக்கக் குடியரசு, கொங்கோ ஆகிய வற்றின் எல்லையில் மொண்டிகா ஆய்வுமையத்தில் நிகழ்த தப்பட்ட ஆய்வுகளில், கொரில்லாக் குரங்குகளின் ஒரு வகை இனமான மேற்குப்



பிரதேச கொரில்லாக்கள் (WESTERN GORILLA) மனிதர்களைப்போல குழுக்களாக, அமைதியாக வாழ்வதாகத் தெரிவித்துள்ளனர். இதேவேளை மலைப்பிரதேசத்தில் வாழும் கொரில்லாக்கள் போர்க்குணம் கொண்டவையாகவும், மார்பில் அடித்துக்கொள்ளும் பழக்கத்தைக் கொண்டனவாகவும் காணப்படுகின்றன.

ஜேர்மனி, அமெரிக்கா ஆகிய நாடுகளின் ஆய்வாளர்கள் இவ்வகையான கொரில்லாக்கள் வாழும் பிரதேசங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட முடிகள், மலம் (FAECAL) ஆகியவற்றின் மரபணுக்களை ஆராய்ந்துள்ளனர். தந்தை வழியாக குண இயல்புகள் கடத்தப்படும் ஆய்வுகள் (PATERNITY TEST) குழுநிலைப்பண்புகளை (SOCIAL GROUP) மேற்குப்பிரதேச கொரில்லாக்கள் பெற்றிருந்ததாக அறிந்து கொண்டனர்.



இவ்வகையான கொரில்லாக்கள் தமது உறவினர்களைச் சந்திக்க நேரிடும் நிலையில், நட்பாக பழக முற்பட்டதை அவதானித்திருந்தனர்.

இதேவேளை மலைப்பிரதேசத்தில் வாழும் கொரில்லாக்கள் இன்னு மொரு குழுவினைச்சந்திக்க முற்பட்ட வேளையில் தமது மார்பில் அடித்துப் போராட்டக் குணங்களை வெளிப்படுத்தியதாக பரிமாண வளர்ச்சி மானிடவியலாளர் (EVOLUTIONARY ANTHOROPOLOGIST) பிராட்லே தெரிவித்துள்ளார்.



# மர்ம இறப்பு

இங்கிலாந்து நாட்டின் லின்கொயின்சயர் கரையோரமாக - 15 தொன் எடையும், 36 அடி நீளமுமுடைய இராட்சத திமிங்கலம் ஒன்று இறந்து கரையொதுங்கியிருக்கிறது. பிரேத பரிசோதனை அறிக்கையின்படி மிருகவைத்தியர்கள் இந்த மிருகத்தின் இறப்புக்கான காரணம் தெரியாது தவிக்கிறார்கள். சில சமயங்களில் இந்த மிருகங்கள் சில இயற்கை நோய்களால் இறக்கின்றன. ஆனாலும் இந்த நோய் ஏன் ஏற்பட்டது என்ற காரணம் தெரியாததுதான் புதுமையாக இருக்கின்றது. இதற்கு முன்னரும் ஒரு இராட்சத திமிங்கலம் இறந்திருக்கின்றது. ஆனால் அதுவும் இறந்ததற்கான காரணம் தெரியவில்லை. வைத்தியர்களின் கூற்றுப்படி இந்த விலங்குகள் அளவுக்கதிகமாக பெருத்த காரணத்தினால், அவற்றின் சுவாசப்பைகளின் இயக்கம் தடைப்பட்டிருக்கிலாம். இப்படியே போனால் உலகளாவிய ரீதியில் திமிங்கலங்களின் இறப்புவீதம் கூடிக்கொண்டிருக்கும்.

# 02.04.2004 தேர்தல் மூலம் வாழும் காலத்தில் ஒரு வரலாறு சமைக்க ஈழத்தமிழினமே! உன்னாலும் முடியும்.


சுரேஸ் பிரேமச்சந்திரன்
①


ஸ்ரீகாந்தா
②


சிவாஜிலிங்கம்
③


சிவநேசன்
④


கஜேந்திரகுமார்
⑤


ரவிராஜ்
⑥

இரத்தத்தால் எழுதும் வரலாறு
இனி இல்லையெனச் சொல்லவும்

அகதிவாழ்வையும், அவலவாழ்வையும் அழித்து
புதிய வாழ்வொன்று எழுதவும்

பேச்சுவார்த்தை மூலம் ஒரு நிரந்தரத் தீர்வுக்குவர
சிங்கள அரசுகளுக்கு அழுத்தம் கொடுக்கவும்

செம்மணிப் புதைகுழிகள் போல்
எம் மண்ணில் இனி இல்லையெனச் சொல்லவும்

மண்ணின் விடுதலையும், பெண்ணின் விடுதலையும்
எம் கண்ணின் ஒளியெனச் சொல்லவும்

புலிகளின் தலைமையில் திரண்டு
தமிழினம் தன் உரிமைகளை மீட்டெடுக்கவும்

ஒன்றுதிரண்டு நிற்கும் தமிழ்த்தேசியத்தின் அடையாளமான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் சின்னமான வீட்டுக்கு நேரே புள்ளடியிட்டும், இவர்களில் எவருக்கேனும் உங்கள் விருப்புவாக்குகளை இட்டும் வெல்லச்செய்வீர்.




ஏக பிரதிநிதிகளின் தாகமே எமது தாகமும்
போராடும் புலிகளின் வழியே எமது வழியும்

நீடித்த அமைதியும் நிரந்தரத் தீர்வும் கிட்ட
உழைப்போமென உறுதியளிக்கிறோம்


பத்மினி சிதம்பரநாதன்
⑦


சிவமகாராஜா
⑧


சீ.வீ.கே. சிவஞானம்
⑨


கஜேந்திரன்
⑩


சூ. சிறில்
⑪


மாவை. சேனாதிராஜா
⑫



# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2004

## தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முதன்மை வேட்பாளர்

## சேனாதிராசாவே தமிழ் மக்களின் தெரிவு



பேரினவாதத்திற்கு எதிராக - அதனை ஆட்சியில் தூக்கி வைத்திருக்கும் பேரினவாத அரசுகளுக்கு எதிராக - தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்காகப் போராடும் தமிழ் மகன் -

ஒடுக்கப்பட்ட தமழ் மக்களின் விடிவுக்காகப் போராடும் தமிழ் மகன் -

தமிழ் மாணவர்களின் சுதந்திரமான கல்விக்கு என்றும் உரத்த குரல் கொடுக்கும் செயல் வீரன் -

எங்கள் மாவை சேனாதிராசாவை அமோக வெற்றியடையச் செய்வோம்.

(சி-2363)

**இலங்கை தமிழ் அரசுக் கட்சி**



X 12

---

## திருவாளர் ஆனந்த சங்கரி குறித்து சிறிமான் வாக்காளர்களுக்கு ஒரு சில தகவல்

தமிழ் வாக்காளர்களுக்கு தெரியப்படுத்த வேண்டிய அவசியமான தகவல் ஒன்றுள்ளது. அது எதுவுமில்லை பூட்டுச் சின்னத்தில் போட்டியிடும் முதன்மை வேட்பாளர் பற்றியதுதான். ஒவ்வொருநாளும் எங்கேயோ மூலைக்குள் மறைந்து கொண்டு ஆத்திரத்தையும் அருவருப்பையும் தருகின்ற விளம்பரங்களை செய்து கொண்டிருக்கின்றார். யாழ்ப்பாணம் 'சிவபூமி' என்றும், கந்தபுராண கலாசாரத்தை கொண்ட தேசம் என்றும் கூறுபவர்கள் தேவார அடிகளை போட்டு தமிழையும், சைவத்தையும் அவமானப்படுத்துகின்றார். போதாதற்கு ஆனையிறவையும் இழுத்து வந்து முன்னிறுத்தி பெண்களைத் தான் மதிப்பதுபோல் நடித்துக் காட்டுகின்றார். இவரது நடிப்பானது தமிழர் மட்டுமல்ல உலகமே வியக்குமளவுக்குப் போய்விடும்போல் தெரிகிறது.

இவரது நடவடிக்கையை எப்படி நடிப்பு என்று கூறமுடியும் என நீங்கள் கேட்கலாம். அதை தான் உங்களுக்கு நான் தெரியப்படுத்த விரும்புகின்றேன். கடந்த பொதுத்தேர்தல் நடக்கவிருந்த காலம். பாராளுமன்றம் கலைக்கப்பட்டு கட்சிகள் வியூகங்களை அமைக்கும் சூழல். அப்போது யாழ்ப்பாணத்தில் சங்கரியாரின் முன்னைநாள் கட்சி அலுவலகத்தில் தந்தை செல்வாவைப் பற்றி அவரை நினைவுகூருகின்ற நிகழ்வு ஒன்று இடம் பெற்றது. அதற்கு கட்சியின் தொண்டர்கள் பலரும் (அப்போது பாராளுமன்றத்தின் உறுப்பினராக இருந்த பலரும்) சமுகமளித்திருந்தனர். தந்தையை நினைவுகூரும் நிகழ்வில் பத்திரிகைக்காரர்கள் அழைக்கப்படவில்லை. ஆனால் கட்சியில் விசுவாசத்துடன் இருந்த பத்திரிகையாளனாகிய நானும் அங்கு சமுகமளித்திருந்தேன்.

ஆரம்பத்தில் தற்போது கூட்டமைப்பின் வேட்பாளராக உள்ளவர் பலர் உரையாற்றினர். தந்தை செல்வாவின் பணிகளை நினைவுபடுத்தி அவரது தமிழ் தேசிய இலட்சியத்தையும் அதனைக் காக்க அவர் செய்த நடவடிக்கைகள் பற்றியும் விலாவாரியாக அவர்கள் எடுத்துக்கூறிவந்தனர். அநேகமாக மூன்று பேர் உரையாற்றியிருப்பார்கள். பூட்டார் ஒரு மூலைக்குள் இருந்து எழுந்து உரையாற்றும் இடத்திற்கு பிரசன்னமானார். வணக்கம் என்றுகூட ஒரு வார்த்தையும் சொல்லவில்லை.

'எல்லோரும் தந்தை செல்வாவைப்பற்றி பேசுகிறீர்கள், நீங்கள் பேசுவதற்கு நான் தான் காரணம் என்பதை மறந்துவிட்டீர்கள். 'தந்தை செல்வா என்ன தந்தை' நான் தான் இந்தக் கட்சியை வளர்த்தவன். பதவியை விட்டெறிந்து அமைச்சுப்பதவியை நிராகரித்து, பாராளுமன்ற ஆசனத்தைக்கூட துச்சமாக மதித்து கட்சியை வளர்த்த என்னைப்பற்றி ஒருவார்த்தைகூட பேசாது, தந்தை தந்தை என பொரிந்து தள்ளுகிறீர்கள். அவர் அப்படி என்ன செய்தார்?' என்றாரே பார்க்கலாம். கூட்டமும், மேடையும் ஒரு தடவை அதிர்ந்துபோனது.

எப்படி இருக்கிறது இவரின் அரசியல். முதியோரை மதிக்க யாழ்ப்பாணச் சமூகத்திற்கு சொல்லிக்கொடுகிறார். தந்தையின் படத்தையும் தனயனின் படத்தையும் காட்டி அல்லவா எங்களை ஏமாற்றப்பார்க்கிறார். எவ்வளவு மோசமான அரசியல் வேலையை அவர் செய்கிறார். தந்தையின் படத்தைப் போட்டு அதற்குப் பக்கத்தில் அமர்ந்துகொண்டு போஸ் கொடுக்கும் சங்கரியாரின் அநாகரிகத்தை காட்ட எம்போன்ற வாக்காளர்களுக்கு இது போதும். தந்தையின் காலத்தில் நான் வாழவில்லை. ஆனால் தந்தை செல்வாவைப் பற்றி எனது தந்தையார் சொல்ல நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன். அது மட்டுமல்ல தந்தை செல்வாவைப்பற்றி நிறைய படித்திருக்கிறேன். சங்கரியாரைப்போல தந்தை ஏமாற்றுக்காரருமல்ல, போக்கிரியுமல்ல கட்சியை ஏமாற்றி மக்களை ஏமாற்றி பிழைப்பு அரசியல் நடத்தும் எவருக்கும் தமிழ் மக்கள் இடங்கொடுக்கக்கூடாது. இதையும் மீறி நீங்கள் சங்கரியாருக்குப் பக்கபலமாகச் செயற்படுவீர்களாயின், அவரை இன்னுமே பாதுகாக்க விரும்புவீர்களாயின் - உங்களைப் போல ஏமாளிகளிடமிருந்து இந்த மக்களை தந்தை செல்வா கூறுவது போல் கடவுள்தான் காப்பாற்றவேண்டும்.

தந்தையை ஏசி, தந்தையை மதிக்காது தன்னை ஏற்றி பேசிவந்த சங்கரியார், ஆனையிறவை கையளிக்கவேண்டுமெனக் கூறி வந்த சங்கரியார், பழைய கண்டி வீதியை சிங்கள இராணுவத்திற்கு காட்டிக்கொடுத்த சங்கரியார் தற்போது அவற்றையெல்லாம் காட்டிக் காட்டி வாக்குக் கேட்கிறார். 50 வருட அரசியல் அனுபவமல்லவா. எப்படி வாலையும், தலையையும் காட்டவல்லவர் அவர் என்பதை புரிந்திருப்பீர்கள். இது சிறிமான் தமிழ் வாக்காளருக்கு சமர்ப்பணம்.

கந்தசாமி சுப்பிரமணியம்,
பலாலி வீதி,
கந்தர்மடம்.

Advt.

(சி/2360)

நேர்காணல் தேர்தல்களம் - 2004 செந்தணன்

# தலைவிதியை தீர்மானிக்கும் தேர்தல் வாக்களிப்பது மக்களின் கடமை



எமது இனப்பிரச்சினையை உலக அரங்கிற்கு எடுத்துச்சென்று, கடந்த இரண்டு வருடங்களாக இப்பேச்சுவார்த்தைகள் மூலம் எமது தரப்பு தியாகங்களையும், எமது அபிலாஷைகளையும் சர்வதேசத்திற்கு எடுத்துக் கூறி, சிங்களப் பேரினவாதிகளின் நோக்கங்களை உலக அரங்கிலே வெளிப்படுத்திய மாபெரும் சக்தி தமிழீழ விடுதலைப் புலிகள் எனத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட வேட்பாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

அண்மைக்கால தேர்தல் நிலவரம் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட வேட்பாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நமது ஈழநாடு பத்திரிக்கைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவருடனான செவ்வி இங்கு பிரசுரமாகின்றது.

**கேள்வி :-** எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் எவ் விதத்தில் முக்கியத்துவம் பெறுகின்றது?

**பதில்:-** உண்மையில் எமது மக்கள் தமது அபிலாஷைகளை வெளிப்படுத்தி சுதந்திர தமிழீழத்திற்கு ஆணை வழங்கிய 1977 ஆம் ஆண்டுத் தேர்தல், எமது வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இந்தத் தேர்தலைவிட எதிர்வரும் ஏப்ரல் 2 ஆம் திகதி இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் முக்கியத்துவம் வாய்ந்தது.

ஏனெனில், 1977 ஆம் ஆண்டு எமது மக்கள் ஜனநாயகரீதி யான ஆணையை நிறைவேற்றக்கூடிய அதிகாரம் அன்று எம்மிடம் இருக்கவில்லை. ஆனால், இந்தமுறை இடம்பெறவுள்ள தேர்தலில் மக்கள் வழங்கப்போகும் ஆணையை நிறைவேற்றக்கூடிய அதிகாரமும் பலமும் எம்மிடமுண்டு. இந்தத் தேர்தலின்மூலம் மக்களால் தெரிவுசெய்யப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்றம் சென்று எமது உரிமைகளை வென்றெடுப்பார்கள் என்பது சாத்தியமற்ற ஒன்று.

ஏனெனில், சிங்கள தேசமும், சிங்களப் பேரினவாதிகளும் எப்போதுமே ஜனநாயக அரசியலுக்கு எதிரானவர்கள். ஆனால், சர்வதேசத்திற்கு எமது அபிலாஷைகளை வெளிப்படுத்த எமது அபிலாஷைகளின் பின்னால் நாம் உறுதியாக நிற்கின்றோம் என்பதை எடுத்துரைத்து, அதனூடாக எமது இலட்சியத்தினை அடைவதற்கு இத்தேர்தல் முக்கியமானதாக அமைகின்றது.

எனவே, எமது மக்கள் கடந்த காலங்களைப் போன்று இது சிங்கள தேசத்தால் நடத்தப்படும் தேர்தல் என எண்ணி வாக்களிப்பதை நிராகரிக்காது வாக்களிக்கவேண்டும். இது எமது தலைவிதியைத் தீர்மானிக்கப் போகின்ற தேர்தல். இதை உணர்ந்து எமது மக்கள் வாக்களிக்கவேண்டும். எமது மக்களின் தனிப்பட்ட கடமை எனக்கருதி ஒவ்வொருவரும் வாக்களிக்கவேண்டும்.

**கேள்வி :-** இத்தேர்தல் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் ஒரு தேசிய உணர்வு வெளிப்பாடாகப் பார்க்கப்படுகின்றது. இந்த உணர்வு வெளிப்பாட்டை நீங்கள் எவ்வாறு பயன்படுத்தப்போகிறீர்கள்?

**பதில்:-** கடந்த தேர்தல் பல தேசவிரோதக் கும்பல்கள் - சிங்களப் பேரினவாதத்தின் முழுப்பலத்தையும் பயன்படுத்தி, கள்ளவாக்குகளைப் போட்டு நாடாளுமன்றம் சென்றுள்ளார்கள். இவர்கள் தமிழ் மக்களது தேசிய உணர்வை கொச்சைப்படுத்துவதோடு, தவறான திசைக்குத் திருப்பி உலக அரங்கிலே பொய்ப் பிரச்சாரத்தை மேற்கொண்டுவருகின்றார்கள். இன்று இவர்களே இராணுவப் பாதுகாப்பில் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றார்கள். இந்தத் தேர்தலை சிங்களதேசமே நடத்துகின்றது.

> **எமது மக்களிற்காக எமது மண்ணில் இருந்துதான் சேவை செய்யவேண்டும் என்றில்லை. என்மீது குற்றம் சுமத்தும் தேச விரோத சக்திகளை மக்கள் நன்கறிவார்கள், ஒரு காலத்தில் தமிழ் மக்களது விடுதலைக் காகப் போராட்டத்தில் இணைந்த இவர்கள், நாம் யாருக்கு எதிராக ஆயுதம் ஏந்தினோமோ அவர்களுடன் இணைந்து அவர்களது கைக் கூலிகளாகச் செயற்படுகின்றார்கள். தேவை யற்ற கருத்துக்களைக்கூறும் இந்தச் சக்தி களை தமிழ் மக்கள் நிராகரிக்கவேண்டும்.**

எனவே, தமது அடிவருடிகளை நாடாளுமன்றம் அனுப்பச் சிங்களப் பேரினவாதிகள் முயற்சிப்பார்கள். எனவே, இந்தத் தீயசக்திகள் நாடாளுமன்றம் செல்வதை நிராகரிப்பதற்கு நாம் எமது ம்க்களின் ஒருமித்த தேசிய உணர்வு வெளிப்பாட்டைப் பயன்படுத்தப்போகின்றோம்.

**கேள்வி :-** கிழக்கு மாகாணத்தில் அண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகளிற்குள் ஏற்பட்ட விரிசல் நிலையானது இந்தத் தேர்தலில் ஏதாவது பாதிப்பினை ஏற்படுத்துமா?

**பதில்:-** எமது தேசியக் கொள்கையில் இருந்து விலகிய கருணாவினது செயற்பாடுகளை எமது மக்கள் இனங்கண்டு கொள்வார்கள். இங்கு ஒன்றைக் குறிப்பிடவேண்டும் - நாம் எமது தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தை முன்வைக்கும் முன்னர், கருணாவுடனும் கலந்தாலோசித்தோம், விடுதலைப் புலிகளின் தலைமைத்துவம், மற்றும் அனைத்து மாவட்ட பிரமுகர்களுடன் கலந்தாலோசித்தே எமது விஞ்ஞாபனத்தை வெளியிட்டோம். எமது விஞ்ஞாபனத்திற்கு கருணா முழு ஒத்துழைப்பையும் வழங்கினார்.

இதைக் கருணா மறுக்கமுடியாது. எமது விஞ்ஞாபனத்திலே தாயகக் கோட்பாட்டைத் தெளிவாக வலியுறுத்தியுள்ளோம். வடக்கு-கிழக்கு இணைந்த எமது தாயகம் என்ற தெளிவான கொள்கையை நாம் முன்வைத்துள்ளோம். இதற்கு அனுசரணை வழங்கிய கருணா, இன்று கொள்கையிலிருந்து மாறுபட்டு நிற்பதும் உண்மையில் கவலைக்குரிய விடயமாகும். அந்நிய சக்திகளிற்கு விலைபோன, கொள்கைப் பற்றற்ற கீழ்த்தரமான ஒருவரே கருணா என்பதை எமது மக்கள் உணரவேண்டும். தனிநபர்கள் விலைபோவதற்கான சந்தர்ப்பங்கள் உண்டு. தமது கொள்கையில் இருந்து மாறுபட்டு விலைபோனவர்களே கருணாவும், ஆனந்தசங்கரியும். எமது மக்கள் உறுதியாக இருந்தால், தனிநபர்களது கருத்துக்களைப் பெறுமதியற்றனவாக்கலாம். எமது மக்கள் தெளிவாகச் செயற்படும்போது, இந்தத் தனிநபர்களது செயற்பாடுகள் இந்தத் தேர்தலில் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது என்பதே எமது கருத்தாகும்.

**கேள்வி :-** தற்பொழுது தென்னிலங்கைப் பிரதான கட்சிகள் இரண்டும் மக்களது வாக்குகளைப் பெறுவதற்காக வாக்குறுதிகளை அள்ளி வீசுகின்றன. இந்தநிலையில் அவர்களது அரசியல் நிலைப்பாடு பற்றி நீங்கள் யாது கூறுகின்றீர்கள்?

**பதில்:-** தென்னிலங்கையில் அரசியலில் இடம்பெறும் சம்பவங்கள் ஒன்றும் புதியவை அல்ல, தென்னிலங்கை அரசியல் இன்று கீழ்த்தரமானநிலையில் உள்ளது என்பதை சர்வதேசமே அறியும். எமது இனப்பிரச்சினை தொடர்பாக இவர்கள் தேர்தற்காலத்தில் வழங்கும் வாக்குறுதிகள் எவையும் நிறை வேற்றப்படுவதில்லை. தென்னிலங்கை அரசியலை வைத்து நாம் எந்த முடிவுகளையும் எடுக்கமுடியாது. எமது கொள்கைகளை முன்வைத்தே நாம் தீர்மானங்களை மேற்கொள்ளவேண்டும். தென்னிலங்கை அரசியலை நாம் பொருட்படுத்தத் தேவையில்லை என்பதே எமது கருத்தாகும். தென்னிலங்கை அரசியலின் கீழ்த்தரமான தன்மையை நன்கறிந்த சர்வதேசம் - தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்கும்படி வற்புறுத்தியது.

**கேள்வி :-** தாங்கள் தேர்தற்காலத்திலே மட்டும் குடாநாட்டிற்கு வருவதாகவும், பின்னர் குடாநாட்டு மக்களைச் சந்திப்பதில்லை என்றும், பொரும்பாலான காலப்பகுதியைத் தென்னிலங்கையிலும் , வெளிநாடுகளிலும் கழிப்பதாகச் சில அரசியற்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன. இது பற்றி உங்கள் கருத்து யாது?

**பதில்:-** இந்தத் தேர்தலில் தனிநபர்கள் முக்கியமல்ல. கடந்த தேர்தலிலும் தனிநபர்கள் முக்கியத்துவம் பெறவில்லை. எனது செயற்பாடுகள் பற்றி எனது மக்கள் அறிவார்கள். குடாநாட்டுக்கு வந்து விளம்பர அரசியல் நடத்தும் கேவலமானநிலையில் நாம் இல்லை. எனது தந்தையாரை எடுத்துப் பாருங்கள். அவர் பல வருடங்களாக குடாநாட்டுக்கு வரவில்லை. கொழும்பிலிருந்தே செயற்பட்டார். மனித உரிமைகள் மீறப்பட்டபோதெல்லாம் குரல் கொடுத்தார். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்ட மக்களிற்குச் சேவை செய்தார். இவற்றை அவர் சிங்கள தேசத்தின் தலைநகரில் இருந்து செய்த போதும், எமது மக்கள் அவருக்கு ஒரு தனி மரியாதையைக் கொடுத்தார்கள். எமது மக்களின் தலைமைத்துவமே மாமனிதர் என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்தது. எனவே, எமது மக்களிற்காக எமது மண்ணில் இருந்துதான் சேவை செய்யவேண்டும் என்றில்லை. என்மீது குற்றம் சுமத்தும் தேசவிரோத சக்திகளை மக்கள் நன்கறிவார்கள், ஒரு காலத்தில் தமிழ் மக்களது விடுதலைக்காகப் போராட்டத்தில் இணைந்த இவர்கள், நாம் யாருக்கு எதிராக ஆயுதம் ஏந்தினோமோ அவர்களுடன் இணைந்து அவர்களது கைக்கூலிகளாகச் செயற்படுகின்றார்கள். தேவையற்ற கருத்துக்களைக்கூறும் இந்தச் சக்திகளை தமிழ் மக்கள் நிராகரிக்கவேண்டும்.

**கேள்வி :-** தங்களது தந்தையார் மாமனிதர் குமார் பொன்னம்பலம் எமது பிரதேசத்திற்கும், மக்களிற்கும் அளப்பரிய சேவைகளை வழங்கியுள்ளார். இந்த வகையில் எத்தகைய சேவைகளை எமது மக்களிற்கு வழங்கத் தாங்கள் உத்தேசித்துள்ளீர்கள்?

**பதில்:-** எனது தந்தையார் ஒரு முக்கிய கருத்தினைத் தெளிவுபடுத்தியுள்ளார். ஜனநாயக அரசியல்ரீதியாக நாம் எதையும் பெற்றுக் கொள்ளமுடியாது. சிங்களதேசம் ஜனநாயகத்திற்கு ஒருபோதும் உரிய மதிப்பளிப்பதில்லை. பேரினவாதிகளின் முன்னே நாம் எமது கருத்துக்களை முன்வைக்க[illegible]புமே தவிர, எதையும் பெற்றுக்கொள்ளமுடியாது என்பதை எனது தந்தை ஏற்கனவே கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளே தமிழ் மக்களது பலம். ஒவ்வொரு தமிழ் மக்களும் விடுதலைப் புலிகளை ஆதரிக்கவேண்டியது அவர்களது தார்மீகக் கடமையென அவர் கருதினார். எனவே, நாம் எங்கிருந்தாவது எமது கொள்கைக்காக எமது மக்களுக்காகச் செயற்பட வேண்டும்.

❖

புலம்பெயர் வாழ்வின் பதிவுகள் பகுதி XXXIX சிவா சின்னப்பொடி

# அதிபரின் முறையீட்டினால் கைதுசெய்யப்பட்ட பெற்றோர்



அந்தச் சிறுவன் அதை பெரிதாக எடுத்துக் கொள்ளாமல், 'அது நல்ல தொழில்தான் ஆனால், எனக்கு அதில் ஆர்வம் இல்லை. அதைவிட என்ரை அப்பாவுக்கு அதிலை விருப்பம் இல்லை என்று செல்லிவிட்டுச் சென்றுவிட்டான்.

அவன் சென்ற பின்பு, அந்தக் கடை முதலாளியும் அவரது மனைவியும் - தங்கள் மகனைக் கூப்பிட்டு வாங்கு வாங்கென்று வாங்கி விட்டனர்.

'உவனே உனக்கெல்லாம் சிநேகிதன், ஊரிலை உவங்களை நாங்கள் தெருவிலையே வர விடுறதில்லை. இஞ்சை எங்கடை வீட்டுக்குள் சுவாமி அறையெல்லாம் இருக்கு. கண்டவங்களையும் வீட்டுக்குள் கூட்டிக்கொண்டு வரக்கூடாது எண்டு உனக்குத் தெரியாதோ' என்று பொரிந்து தள்ளிவிட்டார்.

அந்தச் சிறுவனுக்கு அதிர்ச்சியாகப் போய் விட்டது.

"அவன் நல்ல பொடியன்தானே. அவன் என்ன கள்ளனே? ஏன் நான் அவனை வீட்டுக்குள் கூட்டிக்கொண்டுவரக்கூடாது?" என்று அந்தச் சிறுவன் தனது பெற்றோரைத் திருப்பிக கேட்டான்.

'அடி நாயே நீ என்ன திருப்பிக் கேள்வி கேட்கப்போறியே - கண்ட கீழ் சாதி நாயகளோடு கூட்டுச் சேர்ந்து, கெட்டுப்போனாய் என்றுகூறி நல்ல சாத்தல் விழுந்தது.

மறுநாள் காலை பாடசாலைக்குச் சென்ற அந்தச் சிறுவன் - நடந்ததை தனது நண்பனுக்குச் சொல்ல, மற்றச் சிறுவர்களும் இதை அறிந்து ஆச்சரியப்பட்டனர். இந்த விடயம் வகுப்பாசிரியருக்குச் சொல்லப்பட்டபோது, அவருக்குக் கோபம் வந்துவிட்டது.

ஆபிரிக்க கறுப்பினத்தை சேர்ந்த அந்த வகுப்பின் ஆசிரியர் - மனிதர்களாகப் பிறந்த அத்தனைபேருமே சமமானவர்கள். எந்த ஒருவரையும் பிறப்பையும், நிறத்தையும், செய்யும் தொழிலையும் கொண்டு - அவமதிக்கவோ, ஏற்றத்தாழ்வு பார்க்கவோகூடாது என்று தனது மாணவர்களுக்கு எடுத்துக்கூறினார்.

அத்துடன், தனது மாணவனின் தந்தையான அந்தக் கடை முதலாளியை வரவழைத்து - பிரான்சினுடைய அரசியல் கோட்பாடே விடுதலை, சமத்துவம், சகோதரத்துவம் என்பதை அடிப்படையாகக்கொண்டது. அங்கே சாதி பார்ப்பது - பிறப்பால் மனிதர்களை இழிவு செய்வது எல்லாம் - கடுமையான தண்டனைக்குரிய குற்றம் என்று எச்சரித்தார்.

இந்தக் குறறத்துக்கு 1 இலட்சம் பிராங அபராததகிலிருந்து 10 முதல் 15 வருட சிறைத் தண்டனையும் கிடைக்கும் என்பதையும் சுட்டிககாடடிய அந்த ஆசிரியர், தயவுசெய்து பிள்ளைகளின் மனதில் மோசமான கருத்துக்களை விதைத்து, அவர்களின் எதிர்காலத்தை பாழாக்கவேண்டாம் என்றும் ஆலோசனை சொல்லி அனுப்பினார். நம்மவருக்கு அந்த ஆலோசனை பிடிக்கவில்லை.

'எவன் ஆர் கறுப்பன் எனக்கு புத்திசொல்லுறது. ஆளைப்பார்த்தால் குரங்கை விட மோசம்' என்று கறுவிய அவர், வீட்டில் நடந்ததை பள்ளிக்கூடத்தில் போய் சொன்னதற்காக மகனுக்கு அடி அடி என்று அடித்து விட்டு, 'இனி நீ பளளிக் கூடத்துக்கோ வெளியிலையோ போகக் கூடாது' என்று கூறி அவனை அறை ஒன்றில் விட்டுப் பூட்டி விட்டார்.

மறுநாள் காலை அந்தச் சிறுவன் பாடசாலைக்கு வராததைக் கண்ட அவனது வகுப்பாசிரியர் அதிபரிடம் சென்று முறையிட்டார்.

அதிபருக்கும் - தனது பாடசாலை மாணவர்களிடத்தில் இப்படி ஒரு சம்பவம் நடந்ததா என்று ஆச்சரியமாகப் போய்விட்டது.

அந்தச் சிறுவனின் வீட்டுக்கு தொலைபேசி எடுத்துப் பார்த்தால் - யாரும் பதிலளிக்கவில்லை. அவர் உடனே காவல்துறையினருக்கு தகவல் தெரிவித்தார்.

காவல்துறையினர் வீட்டுக்குச் சென்றபோது முதலாளி கடைக்குப் போய்விட்டார். அவரது மனைவி மட்டும்தான் வீட்டில் இருந்தார். சுதர்சன் (அந்த சிறுவனின் பெயர்) எங்கே? என்று அவரிடம் காவல்துறையினர் விசாரித்தனர்.

சில விநாடிகள் தடுமாறிப்போன அந்தக் தாய் - தனது மகன பள்ளிக்கூடத்துக்குப் போய் விட்டதாகப் பொய்சொன்னார்.

காவல்துறையினருக்கு சந்தேகம் வந்துவிட்டது. பாடசாலை அதிபர் முறைப்பாடுசெய்துதானே நாங்கள் வருகிறோம் என்று சொன்ன அவர்கள் - வீட்டைச் சோதனையிட்டபோது அறையில் பூட்டி வைக்கப்பட்டநிலையில் இருந்து அநதச் சிறுவனை மீட்டதுடன் - வீட்டிலிருந்த அவனது தாயையும், கடைக்குச் சென்று அவனது தந்தையையும் கைது செய்தனர்.

வழக்கு விசாரணை என்று வந்தபோது, முடிதிருத்த் உரிமையாளர் - தனது மகனை இன்னொரு தமிழரைச் சிறைக்குள் தள்ளுவதற்காகச் சாட்சி சொல்லவைக்க விரும்பவில்லை. அது தனக்கும் அந்த கடை முதலாளிக்கும் இடையில் தனிப்பட்ட கோபம் இருந்தது. அதனால்தான் அவர் அவ்வாறு நடந்து கொண்டதாகத் தெரிவித்தார்.

(தொடரும்)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*குடிபுறங் காத்துஓம்பிக் குற்றம் கடிதல்*
*வடுவன்று வேந்தன் தொழில்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## தேர்தல் வன்முறைகளுக்கு ஜனாதிபதியே பொறுப்பு

இலங்கையின் பதின்மூன்றாவது நாடாளுமன்றத்தை தேர்வு செய்வதற்கான பொதுத்தேர்தலுக்கு இன்னமும் மூன்று தினங்கள் மட்டுமே உள்ள நிலையில், தேர்தல் வன்முறைகள் நாளாந்தம் அதிகரித்து வருவதுடன், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் சிலருக்கான அச்சுறுத்தல்களும் பகிரங்கமாகவே விடுக்கப்பட்டு வருவதானது தேர்தலின்போது, ஜனநாயகம் எந்தளவுக்கு மதிக்கப்படும், மக்கள் சுயாதீனமாக வாக்களிக்கும் சுதந்திரம் எந்தளவுக்கு அங்கீகரிக்கப்படும் என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

முன்னாள் ஐ.தே.முன்னணி அரசில் அமைச்சராக இருந்தவரும், தற்போது அதே கட்சியில் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான மகேஸ்வரன் மீது கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டு காயங்களுடன் அவர் உயிர்தப்பியுள்ளார்.

அதேபோல், மட்டக்களப்பு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வேட்பாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜோசப் பரராஜசிங்கம் அவர்களை மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்தே உடனடியாக வெளியேறுமாறு கருணா கும்பலால் அச்சுறுத்தல் விடப்பட்டுள்ள நிலையில் அவர் தனக்கு மேலதிக பாதுகாப்பைக் கோரியுள்ளார்.

யாழ்.குடாவில் கொக்குவில் பகுதியில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினருக்கான தேர்தல் பிரசார நடவடிக்கைக்களில் ஈடுபட்டிருந்த சர்வதேச மாணவர் அமைப்பின் உறுப்பினர்கள் இருவர் ஆயுதந்தாங்கிய பொலிஸாருடனும், படையினருடனும் பாதுகாப்பாக வந்த ஈ.பி.டி.பியினரால் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். தாக்குதலுக்குள்ளான மாணவர்கள் மருத்துவமனையில் சிகிச்சைக்கென அனுமதிக்கப்படவேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை - திருநெல்வேலிப் பகுதியில், பிரசாரப் பணிகளில் ஈடுபட்டிருந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையிலான கருத்து மோதலின்போது மாணவர்கள் மீது தடியடியும், கண்ணீர்ப்புகைப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போது அந்தப் பகுதியால் சென்ற அப்பாவிப் பொதுமக்களும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

வேறுபல சம்பவங்களின்போதும், வாக்குச் சேகரிக்கச் சென்ற சில பிரமுக வேட்பாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் இடையேயான கருத்து முரண்பாடுகளின்போது, வேட்பாளர்களின் பாதுகாப்புக்கென வந்த ஆயுதந்தாங்கிய படையினரால் மக்கள் அச்சுறுத்தல்களுக்கும், அவமதிப்புக்களுக்கும் உள்ளாக நேர்ந்துள்ளது.

மேற்குறிப்பிட்டவை உதாரணத்திற்கான சம்பவங்கள் மட்டுமே.

தமது சொந்த மக்கள் என்று சொல்லிக்கொள்ளும் சில வேட்பாளர்கள் அந்த மக்களிடம் வாக்கு கேட்க ஆயுதப் படையினரின் பாதுகாப்புடன் போகவேண்டிய நிலையில் இருப்பதுதான் அசிங்கமான விடயம்.

வேட்பாளர்களிடம் மக்கள் தமது சந்தேகங்களை, ஆதாரங்களை வெளிப்படுத்துவது அவர்களின் ஜனநாயக உரிமையாகும். அதனால் ஆத்திரமடைவதோ, அந்த மக்களைத் தாக்க முனைவதோ கொள்கை வலுவோ, இலட்சிய உணர்வோ இல்லாத வேட்பாளர்களின் கையாலாகாத்தனமாகவே கருதப்பட வேண்டும்.

குடாநாட்டில் சில கட்சிகளினதும், சுயேட்சைக் குழுக்களதும் பிரசார உத்திகள் மூன்றாந்தரமானவைகளாகவும், மக்களைக் குழப்பத்திலாத்துபவையாகவும், இருப்பதுடன் பொதுமக்களை ஏமாளிகளாக, அரசியல் வரலாறு தெரியாதவர்களாகவும் எண்ணி மேற்கொள்ளப்படுவதாகவே உள்ளது.

நாடாளுமன்ற அரசியலாலும், அரசியல்வாதிகளாலும் மூன்று தசாப்த காலம்வரை ஏமாற்றப்பட்ட தமிழ்மக்கள் இரு தசாப்த கால யுத்தத்தின் பின்னர், அரசியல் ரீதியாகத் தம்மை உறுதிப்படுத்திக்கொண்ட நிலையில், ஒரு கொள்கைக்காக - தமிழ்த் தேசியத்தின் ஒருமைப்பாட்டுத் தனித்துவத்தை சர்வதேச சமூகத்திற்கு உறுதியாகத் தெரியப்படுத்துவதற்காக இந்தத் தேர்தலைப் பயன்படுத்த உத்வேகம் கொண்டுள்ள நிலையில் அவர்களின் உணர்வுகள் சாதாரண சராசரி அரசியல் அபிலாஷைகளைக் கொண்ட, பேரினவாத சக்திகளுடன் இணைந்து செயற்பட்ட, தொடர்ந்தும் செயற்பட முனைப்புக்கொண்ட வேட்பாளர்களுக்குத் தெரியாது, புரியாது.

இந்தப் புரிதலின்மையும், அறியாத்தனமும் கொண்ட வேட்பாளர்களே மக்களிடம் செல்ல ஆயுதந்தாங்கியோரின் துணையை நாடுகின்றனர் என்பதும் தெளிவான விடயமே. இந்தச் சூழலே தேர்தலின் ஜனநாயகத் தன்மையை, தேர்தல் கால வன்முறைகளை, அச்சுறுத்தல்களை ஊக்குவிப்பதாக உள்ளது.

எனவேதான் தேர்தல் - சுயாதீனமாக, மக்கள் சுதந்திரமான முறையில் வாக்களிக்கக்கூடிய வகையில், அச்சுறுத்தல்களற்ற வகையில் நடக்குமா என்ற சந்தேகம் எழுவது தவிர்க்க முடியாததாகியுள்ளது.

இந்தக்கட்டத்தில் ஆயுதப்படையினரைத் தனது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருக்கும் ஜனாதிபதியே, தேர்தல் வன்முறைகளுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் பொறுப்பேற்க வேண்டியவர் என்பதையும் கூறியே ஆகவேண்டும்.

# நாடும் நடப்பும்




# இம்முறை பொதுத்தேர்தலில் 83 பெண் வேட்பாளர்கள்

(கொழும்பு)

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் முதன்முறையாக 83 பெண் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இதில் ஜாதிக ஜனதாக் கட்சி சார்பில் 23 பெண் வேட்பாளர்கள் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடவுள்ளனர். ஏனையவர்கள் வேறு கட்சிகளிலும் சுயேட்சைக் குழுக்களிலும் வெவ்வேறு இடங்களில் போட்டியிடுகின்றனர்.

இதனைவிட, இந்தமுறை பல உறவு முறையானவர்களும் போட்டியிடுகின்றனர். இதில் ஐக்கிய தேசியக்கட்சி சார்பில் மாத்தளை மாவட்டத்தில் அலிக் அலுவிகாரையும், அவரது மகனான ரஞ்சித் அலுவிகாரையும் போட்டியிடுகின்றனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் கொழும்பு மாவட்டத்தில் றெஜிரணதுங்கவும், அவரது மகனான இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான அர்ஜுன ரணதுங்காவும் போட்டியிடுகின்றனர்.

நவசமாஜக் கட்சியின் தேசியப்பட்டியலில் வாசுதேவ நாணயக்கார இடம்பெற்றுள்ள அதேவேளை, இவரது சகோதரர் ஹேமகுமார நாணயக்கார காலி மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிடுகின்றார்.

ஐக்கிய தேசியமுன்னணி சார்பில் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் மகிந்த ராஜபக்ஷவும் அவரது சகோதரர் ஷமல் ராஜபக்ஷவும் இவர்களது நெருங்கிய உறவினரான நிருபமா ராஜபக்ஷவும் போட்டியிடுகின்றனர்.

மாகாண முதலமைச்சர்களான றெஜினோல்ட் கூரே (மேற்கு மாகாணம்), எச்.ஜி.சிறிசேன (தென்மாகாணம்), மோகன் எல்லாவல (சப்பிரகமுவா மாகாணம்), ஏ.எம்.புத்ததாஸ (ஊவா மாகாணம்), அதுலவிஜயசிங்க (வடமேல் மாகாணம்) ஆகியோரும் போட்டியிடுகின்றனர்.

இதனைவிட, முன்னாள் பெண் அமைச்சர்களான அமரா பியசீலி ரத்னாயக்க, ரேணுகா ஹேரத் மற்றும் சுனேத்ரா ரணசிங்க ஆகியோர் ஐக்கிய தேசியக்கட்சி சார்பிலும் - சுமேத பெரேரா, பவித்திராதேவி வன்னியாராச்சி இருவரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பிலும் போட்டியிடுகின்றனர்.

அத்துடன், அவருடைய அரசில் அமைச்சுப் பதவி வகித்த, வகித்துக் கொண்டிருந்த எம்.எச்.மொகமட், ரவிகருணாநாயக்க, கருணாசேன கொடித்துவக்கு, காமினி லொக்குகே, மிலிந்த மொறகொட, பந்துல குணவர்த்தன, ரி.மஸேஸ்வரன் மற்றும் மொகமட் ம.்.றூப் ஆகியோர் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுகின்றனர்.

## இரண்டு பிள்ளைகள் தாய் உட்பட நான்கு பேரைக் காணவில்லை

### மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

இளவாலையில் இரண்டு பிள்ளைகளுடன் தாய் உட்பட நாலவரைக் காணவில்லையென மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இளவாலை வடக்கு இளவாலையைச் சேர்ந்த சுபாஸ்கரன் பூமாவதி, சுபாஸ்கரன் சஞ்சித்குமார்(வயது- 7), சுபாஸ்கரன் பாலகுமார் (வயது - 8 மாதங்கள்), ஐயம்பிள்ளை இராஜேஸ்வரி ஆகியோரே காணாமற்போயுள்ளனர் என பூமாவதியின் மாமியார் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது- இந்த மாதம் 16 ஆம் திகதி முதல் இந்த நான்கு பேரும் காணாமற்போயுள்ளனர். பூமாவதியின் கணவர் தற்போது வெளிநாட்டில் வசித்து வருபவர் ஆவர். பூமாவதியின் மாமியார்- இவர்கள் நால்வரும் எங்குசென்றனர் என்று தெரியாத காரணத்தால், பத்துத்தினங்களின் பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தார்.

## தமிழ்க் கட்சி வேட்பாளர்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்படும்

### பொலிஸ் மா அதிபர் தீர்மானம்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தல் முடியும்வரை தமிழ் அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களின் பாதுகாப்பினைப் பலப்படுத்துவதற்குப் பொலிஸ் மா அதிபர் இந்திரா டி சில்வா தீர்மானித்துள்ளார்.

இதற்காகப் புதிய திட்டங்களை வகுத்துள்ளதாகவும், புதிய பாதுகாப்புத் திட்டத்திற்கு அமைய வேட்பாளர்களிடமிருந்து பல்வேறு தக்வல்களைத் தாம் திரட்டியிருப்பதாகவும் அவர் கூறினார்.

அத்துடன், பாதுகாப்பு அதிகரிப்பினைக் கோரும் வேட்பாளர்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது. இதேவேளை, ஏனைய அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களின் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸ் மா அதிபர் மேலும் தெரிவித்தார்.

## கொழும்பு நகரின் பாதுகாப்புக்கு பொலிஸாருடன் இராணுவத்தினரும்

(கொழும்பு)

கொழும்பு நகரின் பாதுகாப்பு நடவடிக்கைக்காக பொலிஸாருக்கு உதவியாக இராணுவத்தினரும் இணைகின்றனர். தேர்தல் முடியும்வரை இந்தப் பாதுகாப்பு நடைமுறையில் இருக்குமெனக் கொழும்பு பகுதியின் பிரதி பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

இது தொடர்பான விசேட பேச்சுவார்த்தை ஒன்று நேற்று முன்தினம் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளுடன் இடம்பெற்றது. இதன்படி - கொழும்பு நகருக்குள் பிரவேசிக்கும் சகல வாகனங்களும் இராணுவத்தினரின் உதவியுடன் சோதனை செய்யப்படும். அத்துடன், தேடுதல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

இதேவேளை, தேர்தல் பிரசாரக் கூட்டத்திற்காக விசேட பாதுகாப்புமுறை ஒன்றும் இன்றுமுதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

கொழும்பு நகரில் நடைபெறும் சகல தேர்தல் பிரசாரக் கூட்டத்திற்குச் செல்லும் ஆதரவாளர்களையும் சோதனை செய்யவிருப்பதாகவும், அத்துடன் தேர்தல் பிரசாரக்கூட்டங்கள் நடைபெறும் இடங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மன்னார் மாவட்டத்தில் இம்முறை 53 534 பேர் வாக்களிக்கத் தகுதி

மன்னார் மாவட்டத்தில் இம்முறை 53 534 பேர் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர். இவர்கள் வாக்களிப்பதற்கு 67 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதேவேளை 1279 அரச ஊழியர்கள் தபால்மூலம் வாக்களித்துள்ளனர். மேலும் 67 வாக்களிப்பு நிலையங்களிலும் 9,373 பேர் தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ளனர்.

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் இருக்கின்ற வாக்காளர்கள் உயிலங்குளம், வண்ணாமோட்டை மற்றும் மடுக்கரை ஆகிய இடங்களில் வாக்களிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(201)

# விகிதாசாரத் தேர்தல் முறை ஒரு விளக்கம்

கே.ரி.கணேசலிங்கம்

இலங்கையின் தேர்தல் வரலாற்றில் மீண்டுமொரு தடவை தமிழர்கள் தேர்தல் களத்திறகு ஏப்ரல் 2 ஆம் திகதி சமுகமளிக்கப் போகின்றார்கள். இந்நிலையில் இலங்கையில் தற்போது பயன்படுத்தப்பட்டுவரும் தேர்தல் முறைமை பற்றியும் அதன் பிரயோகம் பற்றியும் அதிகமான விளக்கமின்மை எல்லோர் மத்தியிலும் உள்ளது. எனவே இந்தக் கட்டுரை இலங்கையிலுள்ள தேர்தல் முறைமையை முழுமையாக மதிப்பிட முயலுகின்றது.

முதலில் நாம் பயன்படுத்துகின்ற தேர்தல் முறைமை விகிதாசார பிரதிநிதித்துவ முறைமை என்பதை விளங்கிக்கொள்ள முயலுவோம். இது பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகளில் மிகவெற்றிகரமாக அமுலாகிவரும் தேர்தல் முறையாகவும் உள்ளது. விகிதாசாரத் தேர்தல் முறைமை இரண்டு பிரிவாக இலங்கையில் பயன்படுத்தப்படுகின்றது.

1.தனிமாற்று வாக்குரிமை

11.கட்சிப்பட்டியல் முறைமை

இதில் தனிமாற்று வாக்குமுறை ஜனாதிபதி தேர்தலுக்குரிய தேர்தல் முறையாக விளங்குகின்றது. ஆனால் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல் கட்சிப்பட்டியல் முறைமையினதாக கருதப்படுவதுண்டு. எனவே நாம் கட்சிப்பட்டியல் முறைமை பற்றியே அதிகம் தெரிந்திருத்தல் வேண்டும். ஏனெனில் இத்தேர்தல், கட்சிகளுக்கும் அதன் தலைமைகளுக்கும் அதிக அதிகாரமும் தனித்துவமும் கொண்டிருக்கின்ற தேர்தலாக அமைவதுடன் கட்சிகளில் தேர்தல் பட்டியல் முறைமைப்படி உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

கட்சிப்பட்டியலானது ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளும் சுயேட்சைக்குழுக்களும் தங்கள் தேர்தல் மாவட்டத்திற்கான வேட்பாளர்கள் அடங்கிய பட்டியலை மாவட்டத் தேர்தல் அலுவலர்களிடம் சமர்ப்பித்து வேட்புமனுவைத் தாக்கல் செய்யும். அவ்வாறு செய்யும்போது ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் தெரிவு செய்யப்படவுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையை விட மூன்று உறுப்பினர்களை மேலதிகமாக இணைத்து ஒவ்வொரு கட்சியும் சுயேட்சைக் குழுக்களும் வேட்புமனுவைத்தாக்கல் செய்யும். அவ்வாறு மூன்று உறுப்பினர்களை மேலதிகமாக அதிகரித்து வழங்குவதற்குக் காரணம் குறிப்பிட்ட கட்சியின் வேட்பாளர் ஒருவர் இறந்துவிட்டால் இடைத்தேர்தலை நடததுவதற்கு விகிதாசாரத் தேர்தல் முறைமையில் இடமில்லை. அதனால் மேலதிகமாக அதிகரித்துள்ள வேட்பாளரில் ஒருவர் வாக்கு விகிதத்தின் அடிப்படையில் நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்படுவார். உதாரணமாக யாழ். மாவட்டத் தேர்தல் தொகுதியில் 9 உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்போது 12 பேரின் பெயர்ப்பட்டியலும் இலக்கமும் ஒவ்வொரு கட்சி/சுயேட்சைக் குழுக்களால் வழங்கப்பட்டுள்ளது. இதில் ஒவ்வொரு கட்சி, சுயேட்சைக்குழுக்களுக்கு 12 இலக்கங்கள் கொடுக்கப்படும். இதில் விருப்பத் தெரிவின்படி ஒவ்வொரு வாக்காளரும் மூன்று வேட்பாளருக்கு மட்டுமே விருப்பத் தெரிவை அளிக்கலாம். மூன்று வாக்காளருக்கு மேல் வாக்களிப்பீர்களாயின் உங்கள் வாக்கு நிராகரிக்கப்படும். அதாவது கட்சியும் அதன் சின்னமும் உங்களுக்குத் தெரிந்திருப்பதுடன் எதற்கு முதலில் வாக்களிப்பதென்பது அடிப்படையான அம்சமாகும். சில சந்தர்ப்பத்தில் ஒரு வாக்காளர் கட்சியின் சின்னத்துக்கு வாக்களித்துவிட்டு விருப்பு வாக்கை அளிக்காது விட்டாலும் உங்கள் வாக்கு கட்சிக்குரியதாகக் கணிக்கப்படும். எனவே வாக்காளர்கள் வாக்களிக்கும்போது சரியாக வாக்களிப்பதுடன் கட்சியின் சின்னத்திற்கு வாக்களித்துவிட்டே விருப்புவாக்கினை அளிப்பது பற்றி சிந்திக்க வேண்டும். நீங்கள் எக்கட்சியின் சின்னத்துக்கு வாக்களிக்கப் போகிறீர்களோ அக்கட்சியின் வேட்பாளருக்கே உங்கள் விருப்பு வாக்குகளும் அளிக்கப்பட்டதாகக் கருதப்படும். ஏனெனில் எல்லாவேட்பாளருக்கும் ஒரே இலக்கமே வழங்கப்படும். அதாவது யாழ்மாவட்டத்தில் போட்டியிடும் 8 கட்சிகளுக்கும் 2 சுயேட்சைக் குழுக்களுக்கும் அவை அளித்த கட்சிப்பட்டியலுக்கு ஏற்பவே இலக்கங்கள் ஒதுக்கப்படுகின்றது. இந்த இலக்கங்கள் சிங்கள முதலெழுத்துக்களின் அடிப்படையில் கட்சி வேட்பாளரின் பெயர்களின் முதல் எழுத்துக்களுக்கு இலக்கங்கள் வழங்கப்பட வேண்டுமென தேர்தல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் ஒரு கட்சிக்கு வாக்கை அளித்துவிட்டு வேறு கட்சி வேட்பாளருக்கு விருப்பத்தெரிவை அளிக்கலாமென கருதிவிடாதீர்கள் அப்படி எதுவும் இத்தேர்தலில் நிகழாது.

சரியாகவும் உங்கள் வாக்குகளை முழுமையாகவும் எப்படிப் பயன்படுத்தலாம் என்பதை ஒரு மாதிரியூடாகப்பார்ப்போம்.

| கட்சியின் பெயர் | சின்னம் | வாக்கு |
|---|---|---|
| X கட்சி, | ○ | × |
| Y கட்சி | ⬭ | |

| 1 | ~~2~~ | 3 | ~~4~~ | 5 | ~~6~~ | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

யாழ்.மாவட்டத்தில் X,Y என்ற கட்சிகள் பந்து, முட்டை ஆகிய சின்னங்களில் போட்டியிடுகின்றன. முதலில் சின்னத்துக்கு வாக்களிப்பதும் பின்னர் இலக்கத்துக்கு வாக்களிப்பதும் காட்டப்பட்டுள்ளது. இலக்கங்களை வெட்டி வாக்களிக்கவேண்டும். புள்ளடி - எக்காரணம் கொண்டும் புள்ளடி இடும் பெட்டியின் கோடுகளை முட்டக்கூடாது.

அவ்வாறே வெட்டவும் கூடாது. அவ்வாறானது நிராகரிக்கப்படும்.

உதாரணம்-

☒ இப்படி இடக்கூடாது.

☒ இப்படியும் இடக்கூடாது.

☒9 ☒6 8× இப்படியும் விருப்பு வாக்கை அளிக்கக்கூடாது. அதைவிட வாக்குச்சீட்டில் வேறு எந்த வார்த்தையையோ வார்த்தைகளையோ எழுதக்கூடாது. ஏற்கனவே இடப்பட்ட புள்ளடியை இட்டால் வாக்கு நிராகரிக்கப்படும். மேற்கூறியவாறு நீங்கள் வாக்களித்தீர்கள் ஆயின் உங்கள் வாக்குகள் நிராகரிக்கப்படும். கட்சியின் சின்னத்திற்கு சரியாக வாக்களித்து விருப்புவாக்குகளை தவறாகப் பயன்படுத்தினால் கட்சிக்கு மட்டுமே உங்கள் வாக்குகள் செல்லுபடியாகும்.

இலங்கையின் நாடாளுமன்றத்தில் 225 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல் நடைபெறவுள்ளது.

225 பேரில் 196 பேர் நேரடி வாக்குப் பதிவுகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவார்கள். இதில் 22 தேர்தல் மாவட்டங்கள் இலங்கையிலுள்ளன. வாக்காளர் தொகையையும் மக்கள் தொகையையும் அடிப்படையாகக் கொண்டு தேர்தல் மாவட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

நிர்வாக மாவட்டங்கள் ஒரு தேர்தல் மாவட்டமாக கனிக்கப்படுகின்றது. (யாழ்.மாவட்டம் - கிளிநொச்சி மாவட்டம், யாழ்ப்பாணம் )

இந்தத் தேர்தல் மாவட்டம் ஒவ்வொன்றிலும் போட்டியிடுகின்ற கட்சிகளில் 5 சதவீதத்துக்குக் குறைவான வாக்குகளைப் பெறும் கட்சி, ஆசனம் ஒதுக்கப்படுவதிலிருந்து நீக்கப்படுவதுடன் இந்த 5 சதவீதம் அளிக்கப்பட்ட வாக்குகளிலிருந்தே கணிப்பீடு செய்யப்படும். அத்துடன் 5 சதவீதத்திற்கு அதிகமான வாக்குகளைப் பெற்ற கட்சிகளில் எந்தக் கட்சி அதிகமான வாக்குகளைப் பெறுகின்றதோ அந்தக் கட்சிக்கு போனஸ் ஆசனம் வழங்கப்படும். இது 22 தேர்தல் மாவட்டங்களிலும் அதிக வாக்குகளைப் பெறும் கட்சிகள் ஒவ்வொன்றிற்கும் கிடைக்கும் ஆசனமாகவுள்ளது. உதாரணத்திற்கு யாழ்.மாவட்டத்தில் X என்ற கட்சி அதிக வாக்குகளைப் பெற்றுள்ளதெனக் காணப்படும்போது அக்கட்சிக்கு போனஸ் ஆசனம் ஒதுக்கப்படும். மீதியாக உள்ள 8 ஆசனங்கள் போனஸ் ஆசனத்தைப் பெற்ற கட்சிக்கும் ஏனைய கட்சிகளுக்கும் பங்கிடப்படும். அப்பங்குக்கு ஆசனங்களைப் பெறத் தகுதியுடைய கட்சிகளின் வாக்குகளைக் கூட்டி போனஸ் ஆசனத்தை கழித்து மீதி ஆசனத்தால் வகுக்கும்போது ஒரு வேட்பாளர் நாடாளுமன்ற உறுப்பினராவதற்கு எவ்வளவு வாக்குகள் பெற வேண்டும் என்பது தெரியவரும். அதன்படி யாழ்.மாவட்டத்தில் 08 உறுப்பினர்களும் தகுதியுடைய கட்சிக்குப் பங்கிடப்படும்.

இதனடிப்படையில் 196 ஆசனம் தெரிவாகும். பின்னர் தேசிய மட்டத்தில் ஒவ்வொரு கட்சிகளும் (தேசிய ரீதியில் போட்டியிடுகின்ற கட்சியில் மட்டும்) பெற்றிருந்த வாக்கு விகிதத்திற்கு ஏற்ப 29 ஆசனங்களும் பங்கிடப்படும். அதாவது தேசிய மட்டத்தில் போட்டியிடும் கட்சிகள் வேட்பாளர்கள் பட்டியலை வழங்கும்போது 29 உறுப்பினர்களது பெயர் விபரத்தையும் தெரிவத்தாட்சி அலுவலகத்தில் சமாப்பிப்பார்கள். பின்னர் கட்சிகள் அளித்த பெயர்பட்டியலில் முதன்மை ஒழுங்கின்படி கட்சிகளுக்கு கிடைக்கும் தேசியப் பட்டியல் ஆசனங்கள் நிரப்பப்படும். இதில் தேசிய ரீதியில் அதிக வாக்கு விகிதத்தைப் பெறும் கட்சிக்கு தேசிப்பட்டியல் ஆசனத்தில் அரைவாசி ஆசனங்கள் கொடுக்கப்படும். தேர்தல் மாவட்டத்தில் ஆசனத்தைப் பெற முடியாத கட்சியும் தேசியப் பட்டியலில் ஆசனங்களைப் பெறலாம். 2000 ஆம் ஆண்டுத் தேர்தலில் சிஹல உறுமய ஒரு ஆசனத்தைப பெற்றது குறிப்பிடத்தக்கது.




தமிழ்த் தேசியம் பலம் பெறவும், உழைக்கும்
வர்க்கத்தின் பெருமை ஓங்கவும் உழைத்த இவரை
அதிகப்படியான வாக்குகளால்,
தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பில்
யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்வோம்.

சி.சிவநேசன்



பொதுமுகாமையாளர்
வடமாகாண ப.தெ.வள.அபிவிருத்தி
கூட்டுறவு நிறுவனங்களின்
பேரிணையம்.

யாழ்.மாவட்ட தொழிலாளர்
சமூகம்

(சி-2359)

# பொதுத் தேர்தல் - 2004.04.02

## வாக்காளருக்கொரு வேண்டுகோள்

இத்தேர்தல் தமிழ்த்தேசிய இனத்தைப் பொறுத்தவரை மிக முக்கியமானதாகும். இதனால் உங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்துமாறு வேண்டிநிற்கின்றோம்.

ஒவ்வொரு வாக்காளருக்கும் வாக்காளர் அட்டை தேர்தல் அலுவலகத்தினால் அஞ்சலில் அனுப்பப்பட்டிருக்கும். கிடைக்காதவர்கள் உடனடியாக தங்களின் அஞ்சல் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளுங்கள். உங்கள் வாக்காளர் அட்டைகளை வேறுயாரும் களவாடித் தவறாகப் பயன்படுத்த அனுமதியாதீர்கள்.

வாக்காளர் அட்டை கிடைக்காதவிடத்து வாக்காளர் இடாப்பிலிருந்து உங்கள் பெயர், தொடர் இலக்கம் என்பவற்றை உங்கள் பகுதி எங்கள் வேட்பாளர்களிடமிருந்து பெற்றுவாக்களிக்கலாம். உங்கள் வாக்குரிமையை எவரும் மறுக்கமுடியாது. ஆனால், வாக்களிக்கும் நேரம் தொடங்கியதும் வாக்களிக்க ஆயத்தமாய் இருங்கள், வாக்களியுங்கள்.

1) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களுக்கு, இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் "வீடு" சின்னத்திற்கு பக்கத்தில் உள்ள சதுரக் கூட்டிற்குள் X புள்ளடியிடுங்கள்.

2) அதன்பின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களில் விருப்பமான மூவரைத் தெரிவுசெய்வதற்கு அவரவர் இலக்கங்களுக்கு மேலே X புள்ளடியிடுங்கள். வீட்டுச் சின்னத்திற்கு வாக்களித்தால் மட்டுமே நீங்கள் வழங்கும் விருப்பு வாக்குகளும் செல்லுபடியாகும். உங்களுக்கு உரிய விருப்பு வாக்குளை மூவருக்கு மட்டுமே பாவிக்கலாம். மூவர் இலக்கங்களுக்கு மேலே புள்ளடியிடவேண்டும்.

| சின்னம் | இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | | | | | | | | X |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| விருப்பு வாக்கு | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| இலக்கங்கள் | 11 | 12 | | | | | | | | |

| | | | |
|---|---|---|---|
| சுரேஸ் பிரேமச்சந்திரன் | 1 | பத்மினி சிதம்பரநாதன் | 7 |
| ந. ஸ்ரீகாந்தா | 2 | சி. சிவமகாராசா | 8 |
| எம். கே. சிவாஜிலிங்கம் | 3 | சி. வி. கே. சிவஞானம் | 9 |
| கி. சிவனேசன் | 4 | செ. கஜேந்திரன் | 10 |
| பொ. கஜேந்திரகுமார் | 5 | சொலமன் சூ. சிறில் | 11 |
| ந. இரவிராஜ் | 6 | சோமசுந்தரம் சேனாதிராஜா மாவை | 12 |

(சி-2364)

**பொதுச்செயலாளர், இலங்கை தமிழ் அரசுக்கட்சி.**

29.03.2004

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் யாழ்.மாவட்டம் 2004



## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

- மறத்தமிழர் நாம் மண்டியிட மாட்டோம் என்பதை சிங்கள தேசத்திற்கு உணர்த்திட...
- புலிகளின் பின்னால் விடுதலைக்கு உழைக்க ஒன்றுபட்டோம் என்பதை வெளிப்படுத்திட...
- இனத்தை விற்று பிழைப்போரை எட்ட விரட்டிட...



## அளியுங்கள் உங்கள் வாக்கை தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு

தாயகத்தின் விடிவுக்காக
ஜனநாயக வழியில் போராடி
தியாகியான மாமனிதர்
குமார் பொன்னம்பலத்தின் புதல்வன்

தமிழ்த்தேசியத்தின் விடிவுக்காகத்
தன்னை அர்ப்பணித்துச் சேவையாற்றும்
செயல்வீரர்

இல. 5 X



திரு.கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

மாமனிதர் குமாரின் வாழ்வில்
பயணிக்கும் கொள்கை வீரர்களுக்கு
உங்கள் விருப்பு வாக்கை வழங்கி
பெருவெற்றி பெறச் செய்யுங்கள்.



இல. 9 X

திரு.சி.வீ.கே.சிவஞானம்

**கூட்டமைப்பின் வெற்றி தமிழினத்தின் வெற்றி**

மாமனிதர் குமார் பொன்னம்பலம்
ஞாபகார்த்தக் குழு (கனடா)

இலங்கைத் தமிழரசுக் கட்சி X

(சி-2311)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தமிழ்மக்களின் ஏக பிரதிநிதிகளாக புலிகளை ஏற்றுக்கொள்ளமுடியாது

## ஜே.வி.பி தலைவர் கூறுகிறார்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளை தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக - ஜனநாயக அரசாங்கம் ஒன்றினால் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று- மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

பி.பி.சியின் உலக சேவைக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

விடுதலைப் புலிகளுக்கு மக்களின் ஆதரவு கிடைக்கவில்லை. அவர்கள் பலாத்காரத்தைப் பிரயோகிக்கிறார்கள்.

சமஷ்டி முறை அல்லது அதிகாரப்பரவலாக்கல் மூலம் நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நியாயமான, சுதந்திரமான முறையில் தேர்தல் நடைபெற்றால், அதன் மூலம் மக்களுக்கு சமஷ்டிமுறை அவசியமில்லை என்பதை தமிழ் மக்கள் உணர்ந்துவிடுவார்கள்.

தடைப்பட்டுள்ள சமாதான நடவடிக்கைகள் தற்போது நடைபெறாததால் அதனை முன்னெடுப்பதற்கான அவசியம் நிலவுகிறது.

நோர்வே பிரதிநிதிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் தொடர்ந்து செயற்படவேண்டுமானால், அதுகுறித்து, மக்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாகவேண்டும் என்றும் சோமவன்ச அமரசிங்க குறிப்பிட்டார்.

## அரசாங்க ஊடகங்கள் வழக்கு!

(கொழும்பு)

அரசாங்க இலத்திரனியல் ஊடகங்கள், தேர்தல் ஆணையாளருக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்றை தாக்கல் செய்துள்ளன.

தேர்தல் ஆணையாளர் வெளியிட்ட வழிகாட்டல்களுக்கு அமைய, இலத்திரனியல் ஊடகங்கள் - வாக்களிப்பு ஆரம்பமாவதற்கு 72 மணித்தியாலத்திற்கு முன்னதாக பிரசாரங்களை முடிக்கவேண்டும்.

ஆனால், கட்சி ஊடகங்களுக்கு 48 மணித்தியாலங்கள் கால அவகாசம் வழங்கப்பட்டதாக, மனுதாரர்களான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபாவாஹினிக் கூட்டுத்தாபனம், சுயாதீன தொலைக்காட்சி என்பன சுட்டிக்காட்டியுள்ளன.

இதன் காரணமாக தாம் ஏற்கனவே ஏற்றுக்கொண்ட தேர்தல் நடவடிக்கைகளை ஒலிபரப்புவதற்குப் போதிய கால அவகாசமில்லை எனறு மனுதாரர்கள் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

### தமக்கு உரிமை....

தபால் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பித்திருந்தேன். தபால் மூலம் வாக்களிப்பதற்கு அனுப்பி வைக்கப்பட்ட விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக தேர்தல் ஆணையாளர் அறிவித்திருந்தார்.

எனினும், தபால் மூலம் வாக்களிப்பதற்கான வாக்குச்சீட்டு தமக்குக் கிடைக்காமையால், வாக்களிக்கும் உரிமையை இழந்துள்ளதாக அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்தார்.

இந்த முறைப்பாடு தொடர்பாக தேர்தல் ஆணையாளரிடம் மனித உரிமைகள் ஆணைக் குழு விளக்கம் கோரியுள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(202)

### பிரசாரத்திற்கு...

அந்தப் பகுதியில் பொது மக்கள் ஒன்றிணைந்து பிரசாரத்துக்காகச் சென்ற ஈ.பி.டி.பியினர் மீது கற்களை வீசியும், தடிகளால் அடித்தும் துரத்தியடித்தனர். இதன்போது - ஈ.பி.டி.பியினரின் வாகனங்கள் சேதமாக்கப்பட்டன.

அத்துடன், ஈ.பி.டி.பியினரை மிருசுவில் சந்திவரையும் விரட்டிச் சென்ற நூற்றுக்கும்மேற்பட்ட பொது மக்கள் அவர்களை முகாமுக்குள் முடங்க வைத்தனர்.

சுமார் மூன்று மணிநேரமாக முகாமைவிட்டு ஈ.பி.டி.பியினர் வெளியேறாத வகையில் மக்கள் முற்றுகையிட்டிருந்தனர்.

இதனைத்தொடர்ந்து- சுமார் 15 இற்கும் மேற்பட்ட பீல்ட் பைக்குகளாலும், உழவு இயந்திரங்களாலும் கொண்டுவரப்பட்ட நூற்றுக் கணக்கான இராணுவத்தினர் பாதுகாப்பளிக்க, ஈ.பி.டி.பியினர் முகாமைவிட்டு வெளியேறிக் கொடிகாமம் நோக்கிச் சென்றனர்.

இவர்கள் கச்சாய் பகுதயில் பிரசாரம் செய்யமுனைந்தபோதும் பொது மக்கள் எதிர்ப்புக் காட்டியதையடுத்து - தமது பிரசாரங்களைக் கைவிட்டு திரும்பிச் சென்றனர்.

(29, 34)

### விடுதலைப்....

மாவட்டத்தில் ஊடுருவியிருப்பதாக, கருணாவின் செயலாளர் வரதன் கொழும்பு ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்தார்.

# சிறுமி மீதான பாலியல் வல்லுறவு; ஊர்காவற்துறையில் கண்டனப் பேரணி

ஊர்காவற்துறையில் பாடசாலை மாணவி ஒருவரை ஈ.பி.டி.பி உறுப்பினர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய சம்பவத்தைக் கண்டித்து நேற்று கண்டனப் பேரணி ஒன்று நடைபெற்றது.

ஊர்காவற்துறை கரம்பொன் தெற்கைச் சேர்ந்த அலிஸ்ரன் ரேமன் நந்தினி என்ற 12 வயதுச் சிறுமி பாடசாலைக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்தவேளை ஈ.பி.டி.யைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியிருந்தார்.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்தே நேற்று மு.ப. 11 மணிக்கு கண்டனப் பேரணி ஒன்று இடம்பெற்றது.

கரம்பன் சிறிய புஸ்பமகளிர் வித்தியாலயத்தில் இருந்து ஆரம்பமான பேரணி சுருவில் வீதியூடாக ஊர்காவற்துறை சந்தியை சென்றடைந்தது. அங்கிருந்து ஊர்காவற்றை உதவி அரசாங்க அதிபர் பணிமனையைச் சென்றடைந்து நிறைவடைந்தது.

அங்கு ஊர்காவற்துறை உதவி அரச அதிபருக்கான மகஜர் கையளிக்கப்பட்டது. அத்துடன் மனித உரிமைகள் ஆணைக்குழு, சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஆகியவற்றுக்கான மகஜர்களும் கையளிக்கப்பட்டன.

தொடர்ந்து ஊர்காவற்துறை அரசியற்துறை அலுவலகம் ஊர்காவற்துறை பொலிஸார் ஆகியோருக்கான மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

இந்தப் பேரணியின்போது மாணவியின் சுதந்திரத்தை பறிக்காதே, காடையரே மாணவர் கழுத்தை நசுககாதே, மாணவரின் உரிமை பாதுகாக்கப்படவேண்டும் என்ற கோஷங்களையும் பதாகைகளையும் ஏந்தியவாறு ஊர்வலத்தில் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

இந்தப் பேரணியில் சின்னமடு மகாவித்தியாலயம், நாரந்தனை, றோ.க.தக பாடசாலை, கரம்பொன் சண்முகநாதன் மகாவித்தியாலயம், ஊர்காவற்துறை புனித மரியாள் வித்தியாலயம், புனித அந்தோனியார் கல்லூரி ஆகிய பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்கள், பெற்றோர்கள் அதிபர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என பல நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

## அடுத்த அரசாங்கத்தில்

# உயர் பதவிகளைக் கைப்பற்ற ஜே.வி.பி. திட்டமிடுகின்றது!

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியமைத்தால் - முக்கிய அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள் உள்ளிட்ட உயர் பதவிகளில தாம் குறிப்பிடப்படுபவர்களை நியமிக்க சிறிலங்கா சுதந்திரக் கட்சியிடம் வற்புறுத்த ஜே.வி.பி திட்டமிடப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஜே.வி.பி முக்கியஸ்தர்களை மேற்கோள் காட்டி வெளியிடப்பட்டிருக்கும் இந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது -

பாதுகாப்பு, நிதி, ஊடகத்துறை ஆகிய முக்கிய அமைச்சுக்களின் செயலாளர்கள் நியமனத்தில் ஜே.வி.பி.கூடிய அக்கறை செலுத்தவுள்ளது.

தமக்குச் சார்பானவர்களில் கணிசமானவர்களை, உயர்பதவிகளில் நியமிக்க ஜே.வி.பி திட்டமிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை - ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியமைக்குமானால், உயர் பதவியில் ஆட்களை நியமிப்பது தொடர்பாக ஜே.வி.பிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் புதிதாக புரிந்துணர்வு உடன்பாடு ஒன்று கைச்சாத்திடப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அடுத்த அரசாங்கத்தில் உயர் பதவிகளில் நியமிக்கத் தகைமை பெற்றவர்களின் பட்டியல் ஒன்றைத் தயாரிக்கும் பணி ஜனாதிபதி சந்திரிகாவின் ஆலோசகர் மனோதித்த வெல தலைமையில் இடம்பெற்று வருகிறது.

இந்தப் பட்டியலை பின்னர் இரு கட்சிகளின் தலைவர்கள் ஒன்றுகூடி மீள் பரிசீலனை செய்யவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### திருமலையில்...

கிழக்கு கடற்படைத்தளபதி ரியர் அட்மிரல் உபாலி ரணவீர ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் பங்கு பற்றினர்.

திருகோணமலை துறைமுகம் மற்றும் கடற்படை இலக்குகளை எந்தவொரு அச்சுறுத்தலில் இருந்தும் பாதுகாப்பது தொடர்பாகவே இந்தக் கூட்டம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### மட்டு.அரச...

வெளிப்படுத்தத் தயாராகின்ற காலகட்டத்தில் மேற்கொள்ளப்படும் இத்த கைய தாக்குதல் சம்பவங்கள் தமிழ் மக்கள் மத்தியில் குழப்பத்தை விளைவிக்கும் நோக்கம் கொண்டவையாகும்.

இத் தாக்குதல் சதி நடவடிக்கைகள் தொடர்பாக மக்கள் விழிப்புடன் இருக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என அந்த அறிக் கையல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விடுதலைப் புலிகளின்...

அரசுக்கும், சர்வதேசத்துக்கும் எடுத்து விளக்குவதற்கு மக்கள் ஆணையை நிரூபிக்கவேண்டிய வரலாற்றுத் தேவை இன்றிருக்கின்றது.

தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் திருப்பு முனையாகப் பயன்படுத்துகின்ற முதலாவது தேர்தல் என்ற முக்கியத்துவத்தையும் இது பெறுகின்றது.

இந்தத் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பூரணத்துவமான வெற்றியானது எமது இனத்தின் விடுதலைக்கான ஒருபடிச் செயற்பாடாக அமையும்.

எமது மக்களின் ஒவ்வொரு வாககும், எமது உரிமையை வென்றெடுப்பதற்காக- சிங்கள இனவாத சக்திகளுக்கு எதிரான, இதுவரை பிரயோகிக்கப்பட்டுவந்த துப்பாக்கிச் சன்னத்திற்கு எதிரானது.

இதனை உணர்ந்துகொண்டு எதிர்வரும் வெள்ளிக்கிழமையை, எமது உரிமையை வென்றெடுக்க உறுதி பூணும் நாளாக பிரகடனப்படுத்தி தங்களின் வாக்குகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அளித்து, சிங்கள அரசுடன் அரசியல் சமநிலை பேணும் சக்தியை எமது மக்கள் அதிகரிக்கவுள்ளார்கள்.

ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் தாயகத்தில் ஒரு சதுர அடி நிலப்பரப்பைக்கூட வென்றெடுக்கத் திராணியற்றவர்களாக இருக்கும் தமிழ்த்துரோகிகளான - சங்கரி, டக்ளஸ் போனறவர்கள் - எமது மக்கள் யாரிடம் அரசியல் சமநிலைகோரி தமது உரிமைகளை வென்றெடுக்க வேண்டுமோ - அவர்களின் கைக்கூலிகளாக இருந்துகொண்டு செயற்படுகின்றார்கள்.

இதனை விமல் வீரவன்ச தனது கூற்றிலே உறுதிப்படுத்துமாப்போல தெரிவித்துள்ளார்.

இவர்தான் அதிகாரப்பரவலாக்கலுக்கும் இடமில்லை, தமிழர்களுக்கு என்று ஒரு தாயகமும் இல்லை என்கிறார். இவருக்கு சங்கரியும், டக்ளசும் ஆமாப்போடுகின்றார்கள்.

பணத்திற்காக விலைபேசி எமது விடுதலையைக் காட்டிக்கொடுக்கும் இவர்கள்- இன்று சாராயப் போத்தல்களைக் காட்டியும், தையல் இயந்திரங்களைக் காட்டியும், எம்மக்களின் சுயமரியாதையான உணர்வை விலைபேசி வருகின்றனர்.

விடுதலை இன்றேல் வாழ்வில்லையென்று தளராத விடுதலை வேட்கையுடன் யாருக்கும் விலை போகாத, வீரமறத் தமிழரை விலைக்கு வாங்கமுடியாது. ஏப்ரல் 2 இல் மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.



சட்டத்தரணி
ந.சிறிகாந்தா
தமிழர்களின் பலத்தினை கட்டி எழுப்பிட...
அளியுங்கள் உங்கள் வாக்கை
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு
2
(686)
மண்டைதீவு வாழ் பொதுமக்கள்


தமிழ் மக்களின் ஒற்றுமையை
முன்னெடுத்துச் சென்றிட...
க.சுரேஷ் பிரேமச்சந்திரன்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
(ச-2266)
கோப்பாய் வாழ் பொதுமக்கள்


இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 30.03.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.